Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 8.00

இப்போது நாமே யாழ் நகரினும்

10-15 நிமிடங்களில்....

பாஸ்போட்,

அடையாள அட்டை படங்கள் மற்றும்

Album Binding
Photo Creations
Duro Laminating
Photo Graphing
Digital Video



MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB

62/16 STANLEY ROAD, JAFFNA. T.P 021-222 2884 JAFFNA ROAD, MANIPAY.


நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 30 (08.06.2005) புதன்கிழமை இதழ்:252

# புலிகளின் மீதான பயணத் தடை; யுத்த நிறுத்தத்தைப் பாதிக்கும்!

## நோர்வேயிடம் தமிழ்ச்செல்வன் மீண்டும் தெரிவிப்பு







கிளிநொச்சி —

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு - ஒழுங்குகளை மேற்கொள்ள அரசாங்கம் தொடர்ந்தும் தாமதம் காட்டுமானால் -

புலிகள் தமது தரை, கடல், வான் படைகளைக் கொண்டு சுயபாதுகாப்புடன் பயணங்களை மேற்கொள்ள நேரிடும். அப்படியானால் யுத்தநிறுத்த உடன்பாடு கேள்விக்குள்ளாக்கப்படும் என்று நோர்வே அரசுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவுக்கும் விடுதலைப் புலிகள் மிக இறுக்க மாக எடுத்துக் கூறியுள்ளனர்.

நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு வந்த நோர்வே தூதுவர் ஹான்ஸ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்

# கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்; நாடாளுமன்றம் செயலிழப்பு!

கொழும்பு —

திருகோணமலையில் நிறுவப் பட்ட புத்தர்சிலையையும் - மேலதிக டனர்.

மேற்படி கோரிக்கைகளை மாவை சேனாதிராசா எம்.பி நேற்று நாடாளு

கூறினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், நாடாளுமன்றினுள் ஆர்ப்பாட்டத்தில்

## அரசாங்கத்தில் நீடிப்பதா?

# 14ஆம் திகதிக்கு முன்னர் ஜே.வி.பி. இறுதி முடிவு!

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட் டால் - அரசாங்கத்தில் தொடர்ந்து நீடிப்பதா என்பது குறித்து ஜே.வி.பி எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பதாக இறுதி முடிவு எடுக்கவிருப்பதாக தெரி

கூறுவதோடு மட்டும் அல்லாமல் பொதுக்கட்டமைப்புக் குறித்த அனைத்து விடயங்களையும் வாபஸ் பெறுவதாக பகிரங்கமாக அறிவிக்கவேண்டுமென ஜே.பி.பி. கோரவுள்ளதாகவும்- அவ் வாறு ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பை

# நாடாளுமன்றம் செயலிழப்பு!

கொழும்பு—

திருகோணமலையில் நிறுவப்பட்ட புத்தர்சிலையையும் - மேலதிகமாக குவிக்கப்பட்டிருக்கும் படையினரை அகற்றக்கோரியும் -

இது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை உடன் அறிவிக்கக் கோரியும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி கோரிக்கைகளை மாவை சேனாதிராசா எம்.பி நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா பெர்னாண்டோ புள்ளே இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றுக்கு வராத காரணத்தால், பின்பு இது குறித்து கருத்துத் தெரிவிக்கப்படுமெனக் கூறினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், நாடாளுமன்றினுள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சபையை ஒத்திவைக்க சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார நடவடிக்கை எடுத்தார்.

எனினும் மீண்டும் சபை நடவடிக்கைகள் ஆரம்பமானபோதும், மீண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் - அரசாங்கத்தில் தொடர்ந்து நீடிப்பதா என்பது குறித்து ஜே.வி.பி எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பதாக இறுதி முடிவு எடுக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து எதிர்வரும் 10ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஊடகவியலாளர் மாநாட்டில் தெளிவான அறிவிப்பை அந்தக் கட்சி வெளியிடவுள்ளது. ஜனாதிபதி பொதுக்கட்டமைப்புக் குறித்து கையொப்பம் இடுவதில்லையெனக் கூறுவதோடு மட்டும் அல்லாமல் பொதுக்கட்டமைப்புக் குறித்த அனைத்து விடயங்களையும் வாபஸ் பெறுவதாக பகிரங்கமாக அறிவிக்கவேண்டுமென ஜே.பி.பி. கோரவுள்ளதாகவும்- அவ்வாறு ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பை வெளியிடாவிடின் அரசிலிருந்து வெளியேறுவதுடன் நாடுதழுவிய போராட்டங்களை நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி பொதுக் கட்டமைப்புக்கான அனைத்து விட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகத்துறை அமைச்சர் மங்கள பதவியிலிருந்து விலகினார்!



கொழும்பு—

ஊடகத்துறை அமைச்சர் பதவியிலிருந்து மங்கள சமரவீர நேற்று ராஜினாமா செய்தார். இவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாகவும் - இதை ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக்கொண்டதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும் துறைமுகம் மற்றும் கப்பல்துறை அமைச்சராக மங்கள சமரவீர தொடர்ந்தும் பதவி வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஜே.வி.பியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைத்து கடந்த தேர்தலில் போட்டியிட வைப்பதற்கும் இரு கட்சிகளும் இணைந்து செயற்படவும் முன்னின்று செயற்பட்டவர் அமைச்சர் மங்கள சமரவீர.

ஆனால் கடந்த சில வாரங்களாக ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் ஏற்பட்ட உச்சக்கட்ட அரசியல் முறுகலில் ஜே.வி.பியின் பக்கம் நின்று ஜனாதிபதியிடம் பரிந்துபேசி வந்ததால் இவருக்கும் ஜனாபதிபதிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

ஊடக அமைச்சர் என்ற வகையில் மங்கள சமரவீரவுக்கே தெரியப்படுத்தாமல் ஜனாதிபதி அண்மையில்(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஹெலஉறுமய எம்.பிக்கள் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு

### சோபித தேரர் உண்ணாவிரதம்



கொழும்பு—

ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிகஹெல உறுமயவின் எம்.பிகள் நேற்று நாடாளுமன்றக் கூட்டத்தை பகிஷ்கரித்தனர்.

இது குறித்து ஜாதிகஹெல உறுமய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிசன் விரைவில் இலங்கைக்கு வருகிறார்!



கொழும்பு—

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு வந்து பேச்சுக்களை நடத்த விருப்பதாக நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நிலை குறித்தும் அதை முழுமையாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இந்தச் சந்திப்பில் விவாதித்தோம்.

அத்துடன் - பொதுக்கட்டமைப்பு குறித்தும் விவாதித்தோம். பொதுக்கட்டமைப்பில் விரைவில் கையெழுத்திடுவது அவசியமான தேவை என்பது குறித்து பேசினோம். பாதிக்கப்பட்ட மக்கள் உதவியை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பொதுக்கட்டமைப்பானது மிகவும் உதவியாக இருக்கும்.

இந்த மாத இறுதியில் நாங்கள் நோர்வே செல்லவிருக்கிறோம். இங்குள்ள சூழல் குறித்து விவாதிப்போம். வெளியுறவுத்துறை அமைச்சர் ஹெல்கிசன் சில வாரங்களில் இலங்கைக்கு வருகை தருவார்.

பொதுக்கட்டமைப்பு விரைவில் கையெழுத்தாகும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. ஆனால் எந்த நாளில் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது எனத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் நிலையத்துக்கு ஆறு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள்!

## யமஹா நிறுவன விற்பனை முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்——

வடமாகாண கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் நிலையம் அமைப்பதற்கும், இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்காகவும் 6 லட்சம் ரூபா பெறுமதியான நவீன உபகரணங்களை வழங்குவதாக யமஹா வெளியிணைப்பு இயந்திரத்தின் முகாமையாளர் றுவான் பெரேரா உறுதியளித்தார்.

யமஹா வெளியிணைப்பு இயந்திர நிறுவன விற்பனை முகாமையாளர் றுவான் பெரேரா தலைமையிலான குழுவினர் யாழ்.குடாநாட்டுக்கு நேற்றுக் காலை விஜயம் செய்தனர்.

குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களையும், அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தக் குழுவினர் ஆராய்ந்தனர்.

அத்துடன், சுனாமியால் பாதிப்படைந்த இயந்திரங்கள், படகுகள் திருத்துவதற்கு அமைக்கப்பட்ட நிலையங்களையும் பார்வையிட்டனர்.

வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் மற்றும் நிர்வாகிகளையும் சமாச அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அந்தக் கலந்துரையாடலில் சமாசத்தால் அமைக்கப்படவுள்ள இயந்திரங்கள் திருத்தும் நிலையங்களுக்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான நவீன உபகரணங்களை இலவசமாக வழங்குவதாகத் தெரிவித்ததுடன், அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகவும் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கும் மரக்கன்று விநியோகமும்

யாழ்ப்பாணம்——

சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் கருத்தரங்கும், மரக்கன்று விநியோகமும் இன்று காலை 10.00 மணிக்கு வலி. மேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஜ் தலைமையில் நடைபெறும்.

கருத்தரங்கில் முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொள்வர். இவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் இந்த நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதேநாளில் பிற்பகல் 2.00 மணியளவில் வலி. மேற்கு பிரதேசசபை தலைமைச் செயலகம்-சுழிபுரத்தில் இதேமாதிரியான கருத்தரங்கும் மரக்கன்று விநியோகமும், பிரதேச சபை செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளதாக நிறுவனப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (48)

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம்

### (நீகோட்)

### பதவி வெற்றிடங்கள்

வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு 35 வயதிற்கு உட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்களை அடக்கியதாக சுயவிபரப் பட்டியலைத் தயாரித்து 2005.06.20 ந் திகதிக்கு முன்பதாக பிரதித் திட்டப் பணிப்பாளர் நீகோட், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். எனும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவு முறை:- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

| பதவி | ஆகக்குறைந்த தகைமை |
|---|---|
| வேலைத்தளப் பொறியியலாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் B.Sc Civil Engineering பட்டம். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) சான்றிதழ் அல்லது அதற்கீடான சான்றிதழ்கள் அத்துடன் 3 வருட அனுபவம். |
| தரவுப் பதிவு இயக்குனர் | க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த சாதாரண தரத்தில் 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி. அத்துடன் 3 வருட அனுபவம். |
| கணக்குப் பதியுனர் | க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கணக்கியல் அடங்கலாக 3 பாடங்களில் சித்தி. அத்துடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் பின்வரும் சான்றிதழ்களில் ஒன்று. (1) கணக்கீட்டியல் டிப்ளோமா இடைநிலைப் பரீட்சைச் சான்றிதழ். (2) கணக்கீட்டியல் துறையிலான இரண்டு வருட தேசிய சான்றிதழ். |
| எழுதுநர் | க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி. அத்துடன் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி. |

க.கணேஷ்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/4190)


நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்
56 ஆவது நாள்
சந்திரமுகி



13 ஆம் திகதி முதல் ஜித்தன்
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

ராஜா யாழ்ப்பாணம்

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
சூர்யா
ஆக்ஷன் படம்



பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

மனோகரா யாழ்ப்பாணம்

இன்று முதல்
ஸ்ரீகாந்த், கோபிகா, விவேக் நடித்த
கண்டேன்



காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகலிங்கம் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
3 ஆவது வெற்றி வாரமாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், தேவயானி,ரம்பா நடித்த
நினைத்தேன் வந்தாய்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


## சமூக வலுவூட்டாளர் பணிநிலைக்கான ஆளணி வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக வலுவூட்டாளர் பணி நிலைகளுக்கான ஆளணிகள் வட கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகின்றன.

க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்று தொழில் வாய்ப்புக்களின்றி உள்ளவர்களும், க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சிபெற்று சமூக மட்டத்தில் சேவையாற்றியதற்கான அனுபவம் வாய்ந்தவர்களும் தகுந்த ஆவணங்களுடன் எதிர்வரும் 13.06.2005 அன்று முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவு,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப் பணியகம்,
கிளிநொச்சி.

(சி- 3672)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
## Tamils Rehabilitation Organization

### சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணி வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணிகள் வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகின்றனர்.


க.பொ.த. உயர்தரம்வரை கல்வி கற்று தொழில் வாய்ப்புக்களின்றி உள்ளவர்களும், க.பொ.த. சாதாரண தரத்தில் தேர்ச்சிபெற்று, சமூக மட்டத்தில் சேவையாற்றியதற்கான அனுபவம் வாய்ந்தவர்களும் தகுந்த ஆவணங்களுடன் எதிர்வரும் 13.06.2005 அன்று முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக்கழக நடுவப் பணியகத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊடகத்துறை,
நடுவப் பணியகம்.

(C/4191)



# ஓவியர் புகழேந்தியின் புயலின் நிறங்கள்



### ஓவியக் கண்காட்சியும் கருத்துப் பகிர்வும்

**இன்று 08.06.2005 (புதன்) வடமராட்சியில் நெல்லியடி அரசடி அ.த.க பாடசாலை மண்டபத்திலும், 09.06.2005 (வியாழன்) நாளை தென்மராட்சியில் நுணாவில் அமிர்தாம்பிகை அ.த.க பாடசாலை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.**


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வதேச மாணவர் பேரவையினரும்,
நுண்கலைக் கல்லூரியினரும்.

## பொருளாதாரத் தடையை நியாயப்படுத்த

# விமானஓடுபாதை அமைப்பதாக அரசாங்கம் பொய்ப்பிரசாரம்!

### திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்



திருகோணமலை—

எமது மக்கள் மீது இராணுவத்தினரால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைக்கு நியாயம் கற்பிப்பதற்காக, பொய்யான முறையில் நாம் சம்பூர் பகுதியில் விமான இறங்குதளம் ஒன்றை அமைத்துவருவதாக கட்டுக்கதையை இலங்கை இராணுவமும், அதன் புலனாய்வுத் துறையினரும் வெளியிட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றில் இலங்கை இராணுவத்தை மேற்கோள்காட்டி வெளிவந்த 'மூதூரில் புலிகளின் இரண்டாவது விமான தளம் நிர்மாணம்' என்ற செய்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே எழிலன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாம் மூதூரில் எமது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் விமானத் தளம் எதனையும் அமைக்கவில்லை. அவ்வாறு அமைக்கப் படுவதாகக் கூறப்படும் கற்பனையையும் முற்றாக மறுக்கின்றோம்.

மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளையும், பாடசாலைகளையும், வணக்க ஸ்தலங்களையும் மீளப் புனரமைக்க சீமெந்து மற்றும் கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்ல இராணுவம் தடைவித்தது. அதற்கு எதிராக மூதூர் பகுதிமக்கள் பல போராட்டங்களை நடத்தி வருவது அறிந்ததே.

இந்நிலையில் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தமது இருப்பிடங்களை மீள அமைக்கக்கொண்டுசெல் லும் கட்டடப்பொருட்கள் இராணுவத்தால் தடுக்கப்பட்டுள்ளமை இராணுவத்திற்கு சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதால் இராணுவம் புனைகதைகளை கட்டவிழ்த்து விடுவதாக அவர் விசனம் தெரிவித்தார். (10)

# சாலைக் கடற்பகுதியில் கடற்புலிகள் பயிற்சியாம்

### கடற்படை தெரிவிப்பு

கொழும்பு—

கடற்புலிகளின் கரும்புலிப் படையணிப் படகுத் தொகுதி, தாக்குதல் படகுகள் மற்றும் ஆயுதங்களை கடத்திவரும் படகுகள் என்பவற்றைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் கடந்த நான்காம் திகதி சனிக்கிழமை பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாக கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஆயுதங்களை தரையிறக்கும் செயற்பாடு, கடற்படைப் படகுகளை எவ்வாறு தாக்குவது, மற்றும் கூட்டுப்பயிற்சிகள் என்பன இந்தப் பயிற்சி நடவடிக்கையில் இடம்பெற்றிருந்தன.

இந்தப்பயிற்சி நடவடிக்கையில் பொருட்களை ஏற்றும் இரண்டு படகுகள், இரண்டு தாக்குதல் படகுகள், இரண்டு கரும்புலிப்படகுகள் என்பன பயிற்சியில் ஈடுபடுவது கடற்படையினரால் கண்காணிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடற்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கண்காணிப்புக் குழுவிடம் இது தொடர்பாக முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# அமெரிக்காவுடனான பேச்சுக்கள் திருப்திகரமானதாக இருந்ததாம்!

### கதிர்காமர் சொல்கிறார்



கொழும்பு—

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோலீசா ரைஸ், தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரீனா றொக்கா மற்றும் அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.டி. கிரௌச் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் திருப்திகரமாகவும், பயனுள்ள வகையிலும் அமைந்ததாக வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

வொஷிங்ரனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐ.நா.சபையின் பாதுகாப்புச் சபையில் இந்தியா உறுப்புரிமை அந்தஸ்து பெறுவதற்கு இலங்கை பூரண ஆதரவு வழங்கும். பாதுகாப்புச் சபையில் இந்தியா மற்றும் ஜேர்மன் ஆகிய இரண்டு நாடுகளும் உறுப்புரிமை பெறுவதற்கு கடந்த வருடம் செப்ரெம்பர் மாதமே ஜனாதிபதி சந்திரிகா தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துவிட்டார். எனவே, இந்த விடயத்தில் இலங்கை எவ்வித மாற்று நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# டிசெம்பர் 21 ஆம் திகதிக்கு முன் ஜனாதிபதி பதவி விலகவேண்டும்

### இல்லையேல் போராட்டம் என்கிறது ஐ.தே.க.



ஐ.தே.கவின் ஆர்ப்பாட்டம் (ஆவணப்படம்)

கொழும்பு—

எதிர்வரும் டிசம்பர் 21ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா பதவியிலிருந்து விலகாவிடின் மக்களுடன் இணைந்து மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தை ஐ.தே.கட்சி நடத்துமென அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தம்பதெனியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனநாயகத்திற்கு விரோதமாக ஜனாதிபதி பதவியில் சந்திரிகா தொடர்ந்து இருப்பாராயின் ஜனாதிபதி பதவியின் கீழுள்ள அரசின் அதிகாரிகளும் எந்தவொரு நடவடிக்கைகளையும் பொறுப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டாம்.

ஐ.தே.கட்சி சர்வதேச சமூகத்திற்கு இந்தக் கருத்தைகொண்டு செல்லும். இது சட்டரீதியான அரசல்ல. எனவே, எந்த நடவடிக்கையிலும் தலையிட வேண்டாமென நாம் அவர்களுக்கு கூறுவோம். தனது கணவரைக் கொலை செய்தது ஐ.தே.கட்சி எனக் கூறிய ஜனாதிபதி தற்போது தனது கணவர் ஜே.வி.பியினராலேயே கொல்லப்பட்டதாக கூறுகின்றார்.

அத்துடன் 2003 இல் ஐக்கியதேசிய முன்னணி அரசை ஜே.வி.பி. கூறியே கலைத்ததாகவும் ஜனாதிபதி கூறுகின் றார். இவ்வாறு அன்று கூறிய ஜனாதிபதிக்கு தற்போது ஜே.வி.பி வேண்டப்படாத ஒரு கட்சியாக வந்துவிட்டதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# இந்த மாத இறுதிக்குள் நாடாளுமன்றம் கலைப்பு?



நாடாளுமன்ற வளாகம் (ஆவணப்படம்)

கொழும்பு—

இந்தமாத இறுதிக்குள் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் 22 ஆம் திகதி கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தியா சென்ற ஜனாதிபதி தனது இந்த முடிவு தொடர்பில் அந்தநாட்டு அரசின் ஆசீர்வாதத்தையும் பெற்றிருப்பதாக அறியவருகிறது.

பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவருவதாக இல்லை என்பதைத் தெரிந்துகொண்ட பின்னரே ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்தார். பொதுக் கட்டமைப்புக்கு எதிராக ஹெல உறுமய மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஜே.வி.பி ஆதரவு தெரிவித்துள்ளமை, ஜனாதிபதியை இன்னமும் தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு நிர்ப்பந்தித்துள்ளது என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தைக் கலைத்தபின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஜனாதிபதி ஆலோசித்து வருவதாகவும் -

தனது அடுத்தகட்ட வியூகம் குறித்து கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களுடன் மந்திராலோசனை செய்துவருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, நாடாளுமன்றச் செயலாளர் பிரியாணி விஜயசேகரவின் தகவலின்படி எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுகின்றபோது அதில் காலை அமர்வு மாத்திரமே இடம்பெற அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தின் ஏனைய அமர்வுகள் தொடர்பில் அட்டவணைகள் எவையும் வெளியாகவில்லை. அது தொடர்பில் தமக்கு எவ்வித தகவலும் தெரியவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (01)

# புலிச் சந்தேக நபர்கள் 641 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனராம்


கொழும்பு

பயங்கரவாத தடைச்சட்டம் செயற்படுத்தப்படுவதை இடைநிறுத்திய காரணத்தால் சிறையிலிருந்து விடுதலைப் புலிகளெனச் சந்தேகிக்கப்படும் 641 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக, பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களிடையே வெடிமருந்துப் பொருட்கள் கடத்தியமை, வைத்திருந்தமை, துப்பாக்கிப் பாவனை மற்றும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத ஒழிப்பு சட்டத்தின் கீழ் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்பட்டதால், அதிக பயங்கரவாத ஒழிப்பு விசாரணை நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிவந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# நட்வர் சிங்கின் இலங்கை விஜயம் ரத்து



புதுடெல்கி—

இலங்கைக்கு இன்று விஜயம் மேற்கொள்ளவிருந்த இந்திய வெளிநாட்டு அமைச்சர் நட்வர் சிங்கின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தூதுவராலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற சிக்கல்கள், அரசியல் நிலைமைகளாலேயே இந்தப் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உத்தேச பொதுக் கட்டமைப்பு விவகாரம் அரச தரப்பில் சூடுபிடித்துள்ள நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயம் மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் நட்வர்சிங்கின்இலங்கைக்கான அடுத்த விஜயம் குறித்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (தே)

# கிரனைட் வீச்சு!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு கல்குடாவில் பொலிஸ் வீதித்தடை மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கல்மடு வீதித் தடையில் நின்ற பொலிஸார் மீதே கிரனைட் வீசப்பட்டது. எனினும், அது இலக்குத் தவறி 50 மீற்றர் தொலைவில் விழுந்து வெடித்ததால் சேதமெதுவும் ஏற்படவில்லை.

# அனுராதபுரம் விபத்தில் 23 பொலிஸார் காயம்!

கொழும்பு—

அனுராதபுரத்திலிருந்து, திருகோணமலைக்குப் பொலிஸாரை ஏற்றிச்சென்ற வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 23 பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

திகட்டகஸ்திகிலியவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமுற்ற பொலிஸார் குருநாகல் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

படுகாயமுற்ற ஆபத்தான நிலையில் உள்ள 4பொலிஸார் அனுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட்டில் தோல்வியுறும் நிலையில் மேற்கிந்திய அணி!



ஜமெக்கா—

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஜமெக்காவில் இடம்பெற்றுவரும் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் தனது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களை எடுத்துள்ளதால் தோல்வியுறும் நிலையில் உள்ளது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணியில் இன்சமாம் 64, அப்ரிடி 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் நான்காம்நாள் ஆட்டத்தை இருவரும் தொடர்ந்தனர். இதில் அப்ரிடியின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

இவர் 43 பந்துகளில் 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பெஸ்ற்றின் பந்து வீச்சில் சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் இன்சமாமுடன் இணைந்த எவரும் சிறப்பாக விளையாடவில்லை. இதில் அப்துல் ரசாக் 2, கம்ரன் அக்மல் 1, நவீட்-உல்-ஹசன், சபீர் அகமட் மற்றும் டனேஸ் கனேரியா மூவரும் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். ஆனாலும் இன்சமாம் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 194 பந்துகளில் 14 பவுண்டரிகள் அடங்கலாக 117 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.




பந்துவீச்சில் கொலிமோர் மற்றும் பெஸ்ற் இருவரும் தலா நான்கு விக்கெட்டுக்களையும், கிங் மற்றும் கைல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 282 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தன. இதில் கைல் 15, சிமித் 49, சர்வான் (கிற் விக்கெட்)8, ல்ாரா, சந்தர்போல் இருவரும் ஓட்டமெதுவும் எடுக்காமலும், ஹின்ட்ஸ் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பிரவுண் மற்றும் பவல் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 9, 4 ஓட்டங்களைப் பெற்றனர். நான்காம் நாள் ஆட்டநேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வெற்றி பெறுவதற்கு இன்னமும் 168 ஓட்டங்கள் தேவை. கைவசம் 4 விக்கெட்டுக்களே உள்ளன.

பந்துவீச்சில் கனேரியா 4, அப்துல் ரசாக் மற்றும் சபீர் அகமட் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர்.

## சானியா மிர்சா வெற்றிபெற்றார்!



பர்மிங்காம் —

ரூ. 2.5 கோடி பரிசுத் தொகைக்கான எட்ஜ்பேஸ்டன் சர்வதேச ரெனிஸ் போட்டி இங்கிலாந்திலுள்ள பர்மிங்காம் நகரில் நடைபெற்றுவருகிறது.

இதில் முதல் சுற்று ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா கலந்துகொண்டு விளையாடினார்.

முதல் சுற்றில் அவர் லக்சம்பேர்க் நாட்டு வீராங்கனை கிளாடினை எதிர்கொண்டார். இதில் சானியா 6-2, 6-0 என்ற நேர் செட்டில் மிக எளிதாக கிளாடினை வீழ்த்தினார்.

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியில் கலந்துகொண்ட சானியா மிர்சாவால் பிரகாசிக்க முடியவில்லை. ஒற்றையர் ஆட்டத்தில் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறியமையால் உலக தரவரிசையில் 70ஆவது இடத்திலிருந்த அவர் 75ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார்.

## கிரேக் சப்பல் 15ஆம் திகதி இந்தியாவுக்கு வருகிறார்!



மும்பை—

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் கிரேக் சப்பல் நியமிக்கப்பட்டார்.

தெரிவு செய்யப்பட்ட நேரத்தில் இந்தியாவில் இருந்த அவர் பின்னர் அவுஸ்ரேலியா புறப்பட்டுச் சென்றார். அவர் இன்னும் பயிற்சியாளர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தநிலையில், எதிர்வரும் 15ஆம் திகதி அவர் அவுஸ்ரேலியாவில் இருந்து இந்தியா வரவுள்ளார். அதன் பின்னர் பயிற்சியாளர் பதவியை அவர் ஏற்றுக்கொள்வார்.

இலங்கையில் அடுத்தமாதம் 26ஆம் திகதி தொடங்வுள்ள 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவும் பங்கேற்கிறது. கிரேக் சப்பல் வந்ததும் அதற்கான பயிற்சி தொடங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்தார்.

## விளையாட்டு

## பந்தை எறிவதாக மீண்டும் புகார்: சிக்கலில் மாட்டினார் ஹர்பஜன்!



லண்டன் —

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் பந்தை எறிவதாக ஏற்கனவே புகார் எழுந்தது.

இதையடுத்து அவரது பந்து வீச்சை அவுஸ்ரேலிய பல்கலைக் கழகம் ஆய்வு செய்து பந்துவீச்சில் தவறில்லை என்று அறிவித்தது. ஆனால் இப்போது மீண்டும் அவர் சர்ச்சையில் சிக்கியுள்ளார். தற்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கவுண்டி கிளப் போட்டியில் ஹர்பஜன் சிங் பற்கேற்று விளையாடி வருகிறார்.

ஸரே அணியில் விளையாடும் அவர் எதிரணி துடுப்பாட்ட வீரர் மைக்கல் பவுலுக்கு பந்து வீசினார். அது பவுண்டரிக்கு சென்றது.

ஆனால் நடுவர் பீட்டர் வில்லே அதனை நோபோல் என்று அறிவித்ததுடன், சிக்ஸர் எனவும் அறிவித்தார். ஹர்பஜன் சிங் பந்தை எறிந்ததாக நினைத்து அந்த முடிவை நடுவர் எடுத்தார். இதனால் ஹர்பஜனுக்கு மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இது குறித்து எந்த விசாரணையும் நடக்காது என்று போட்டி அமைப்பாளர் தெரிவித்தார்.

## மான் வேட்டையில் ஈடுபட்ட இந்திய அணியின் முன்னாள் கப்டன் பட்டோடி கைது செய்யப்படலாம்?



சண்டிகார்—

மான்வேட்டையில் ஈடுபட்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் பட்டோடி கைது செய்யப்படலாமெனத் தெரியவருகிறது.


ஹரியானா மாநிலம் ஜக்சார் மாவட்ட காட்டுப் பகுதியில் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் கப்டன் பட்டோடி 7 பேருடன் ஒரு வாகனத்தில் வந்தார். அவரின் வாகனத்தை பொலிஸார் சோதனையிட்டனர்.

உள்ளே ஒரு மானின் உடல் மற்றும் 2 முயல்கள் இருந்தன. அவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

அத்துடன் பட்டோடி மீது புகார் பதிவு செய்ய அவரிடம் கையெழுத்து வாங்கினார்கள். பின்னர் அவரையும் மற்றவர்களையும் செல்ல அனுமதியளித்தனர்.

தற்போது பட்டோடி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அவர் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்டோடியிடம் இருந்து 2 துப்பாக்கிகள், 50 துப்பாக்கி ரவைகள் பறிமுதல் செய்யப்பட்டன. மான் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## தனது சாதனையை தானே முறியடித்தார் சேதுப்பிரியா!



மல்லாகம் —

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவி சேதுப்பிரியா கனகசபை - மாவட்ட மட்டத்தில் தனது பழைய சாதனையை முறியடித்து ஈட்டியெறிதலில் 30.30 மீற்றர் தூரத்தை எறிந்து சாதனை படைத்துள்ளார்.

17 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் ஈட்டியெறிதலில் (25 மீற்றர்), குண்டெறிதலில் (7.5 மீற்றர்), தட்டெறிதலில் 23 மீற்றரும், 19 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் ஈட்டியெறிதலில் (25 மீற்றர்), தட்டெறிதலில் (24 மீற்றர்), குண்டெறிதலில் (7.8 மீற்றர்) வீசினார்.

மாவட்ட மட்டத்தில் 28.80 மீற்றர் ஈட்டியெறிதலில் இவர் படைத்த சாதனையையே 2005ஆம் ஆண்டு 30.30 மீற்றருக்கு எறிந்து சாதனை படைத்தார்.

இவர் தேசிய மட்டத்துக்குச் செல்வதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுவருகிறார். தான் இவ்வளவு தூரம் முன்னேறுவதற்கு தனது கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியர் மயில்வாகனமே காரணமென சாதனை படைத்த மாணவி தெரிவிக்கிறார். (72)

## சொகைப் அக்தருக்கு இன்னொரு பிரச்சினை!



கராச்சி—

உடல் தகுதி, ஒழுக்கமின்மை என பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியுள்ள சொகைப் அக்தருக்கு தற்போது, வீரர்கள் ஒப்பந்த விடயத்தில் புதிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்திய, அவுஸ்ரேலிய நாடுகளைப் போல பாகிஸ்தானும் ஒப்பந்த அடிப்படையில் வீரர்களுக்கு சம்பளம் வழங்கிவருகிறது. ஏழு மாதத்துக்கான இந்த ஒப்பந்தம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் முடிகிறது. இதன்பின், ஆறு மாதத்துக்கான புதிய ஒப்பந்தம் செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவுசெய்துள்ளது.

இதில் சொகைப் அக்தர் இடம்பெறுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார் கான் கூறுகையில்-

ஒப்பந்தத்தில் ஒருசில வீரர்களை நீக்கமுடிவு செய்துள்ளோம். உடல் தகுதியின்மையால் அக்தர் கடந்த ஐந்து மாதங்களாக அணியில் இடம்பெறவில்லை. இதனால் புதிய ஒப்பந்தத்தில் இவர் இடம்பெறுவது கடினமே. தவிர- உமர்குல், ஷபீர் அகமட் ஆகியோரும் இடம்பெறுவது சந்தேகமே எனவும் தெரிவித்தார்.

## தொடக்க ஆட்டக்காரராக களமிறங்குவதற்கு தயார்!

### டோனி கூறுகிறார்

கொல்கத்தா—

இந்திய கிரிக்கெட் அணி அடுத்தமாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது.

இதில் கப்டன் கங்கூலி, டெண்டுல்கர் ஆகியோர் இடம்பெற மாட்டார்கள்.

டெண்டுல்கர் இல்லாததால், தொடக்க வீரராக யார் இறங்குவார்? என்பது கேள்விக் குறியாக வுள்ளது. இது குறித்து டோனி கூறியதாவது -

டெண்டுல்கருக்குப் பதிலாக தொடக்க வீரராகக் களமிறங்கத் தயாராக இருக்கிறேன். அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் சிறப்பாக விளையாடுவேன். இது ஒரு புதிய அனுபவத்தையும் ஏற்படுத்தும்.

கிரேக் சப்பலின் பயிற்சி யுக்தியால் என்னால் சிறப்பாகப் பிரகாசிக்கமுடியும் என்று கருதுகிறேனெனத் தெரிவித்தார்.



மாணவர் மலர்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2005

## வினாத்தாள் 01

எல்லா வினாக்களுக்கும் இந்தத் தாளிலே விடையளிக்குக

பின்வரும் பந்தியை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சிகிரியா ஓவியமானது - காசியப்பன் காலத்தில் கி.பி 4 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வரையப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இந்தச் சிகிரியா மலையின் அமைப்பானது- சிங்கம் படுத்திருப்பதைப் போன்று காட்சி தருவதனால், இதைச் சிங்ககிரி எனவும் அழைப்பர். இங்கு 200 இற்கும் அதிகமான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் இந்தக் குகையில் வாழ்ந்த சன்னியாசிகள் சமைத்துண்ட காரணத்தினால், அவற்றின் மூலம் வெளியேறிய புகையானது இந்த ஓவியங்களில் படிந்து பல ஓவியங்களை மறைத்துள்ளன. சிலவற்றை மாத்திரமே நாம் தற்போது காணக்கூடியதாகவுள்ளது.

1. சிகிரியா ஓவியம் யாருடைய காலத்தில் வரையப்பட்டது?
..........................................................
2. சிகிரியா மலை அமைப்பு எப்படியானது?
..........................................................
3. எதனைச் சிங்ககிரி என அழைப்பர்?
..........................................................
4. இந்த ஓவியங்களை எவை மறைத்துள்ளன?
..........................................................

ஒத்த கருத்துள்ள சொற்களைத் தருக.

5. ஓவியம் : ....................
6. சிங்கம் : ....................
7. காட்சி : ....................

எதிர்க் கருத்துள்ள சொற்கள் தருக.

8. அதிகம் : ....................
9. மலை : ....................
10. சிலவற்றை : ....................

ஆங்கிலத்தில் தருக.

11. சிங்கம் : ....................
12. மலை : ....................
13. உணவு : ....................
14. ஓவியங்கள் : ....................

தமிழ்க் கருத்தினை எழுதுக.

15. FATHER : ....................
16. LIBRARY : ....................

இந்தப் பந்தியில் இடம் பெற்ற வினைமுற்றுச் சொல் ஒன்று தருக.

17. ..........................................................

18. ஓவியங்களை மறைத்துள்ளன என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?
19. வரையப்பட்டுள்ளன என்பதை நிகழ்காலத்தில் எழுதுக.
20. ஓவியங்களின் ஒருமைச் சொல்லினை எழுதுக.

சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

21. காலத்திற்கு/ குணங்களை/ ஏற்ப/ கூடாது/ மாற்றக் நிங்கள்/ நல்ல
22. கொடியும்/ மிடுக்கு/ திரண்டால்/ அடம்பன்

இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து எழுதுக.

23. தசரத (மண்ணன், மன்னன்) கோசல நாட்டை ஆண்டு வந்தான்.
24. எனது தாத்தா நன்றாக.................. (வெற்றிலை, வெத்திலை) போடுவார்.

பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.

25. ம.ப.பா : ....................
26. பா.ம.க : ....................

பின்வரும் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுதுக.

27. BLACK BOARD : ....................
28. WATCHER : ....................
29. PLAY GROUND : ....................

பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.


30. ක්‍රීඩා භූමිය ....................
31. කිරි [illegible] ....................

மிகப் பொருத்தமான சொல்லின் இலக்கத்தின் கீழ்க் கோடிடுக.

32. இரவு வேளையில் நடமாடும் பிராணி
1. வண்ணத்துப்பூச்சி 2. வெளவால் 3. காகம்
33. மூலிகை அல்லாத இனம்.
1. சதைக்கரைச்சான் 2. கத்தரி 3. பொன்னாவரை
34. நிலத்தில் படரும் தாவரம்
1. வெற்றிலை 2. வட்டக்காய் 3. பப்பாசி
35. நீரில் மிக விரைவில் கரைவது
1. யூரியா 2. நீலம் 3. மா
36. தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றி வைக்கும் சந்தர்ப்பம்
1. தேசிய துக்க தினத்தில் 2. சுதந்திர தினத்தில்
3. விளையாட்டுப் போட்டியில்



11. மிகவும் இசைபாக்கம் பெற்ற பாலூட்டி



12. மோப்பசக்தி கூடிய விலங்கு யாது?




13. எதிரொலி மூலம் இயங்கப்படும் விலங்கு யாது?



14. முக்கனி அல்லாதது எது?



15. இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படுவது எது?




இல 16 முதல் 20 வரையுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமானதை தெரிவு செய்து அடைப்பினுள் எழுதுக.

16. 1. ஆயிரம் முட்டை இடுவதாகக் கூறப்படுகிறது.



2. நீண்ட காலம் வாழும்
3. வன்கூடு கொண்டது.
4. மெல்ல ஊரும்

17.



1. பாட்டு கேட்காமை
2. படம் பார்க்கலாம்
3. பொழுது போக்குச் சாதனம்.

18.



1. பல்லுக்கு உறுதியானது
2. தாங்கும் வேர் கொண்டது.
3. சிறியவிதை கொண்டது.

19.



1. தீக்குச்சி எரியப் பயன்படும்.
2. கண்ணில் காணப்படும்.
3. ஒளியை புகவிடும்.

20.




1. பறவைகளின் அரண்.
2. உயரப் பறக்கும்.
3. ஒளியை புகவிடும்.

இல 21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைதருக.

21. 4 / 350ml ஐ மில்லிலீற்றரில் தருக.
..........................................................


22.



நிழற்றப்படாத பகுதியின் பின்னம் என்ன?
....................

23. 4 3/10 ஐத் தசம எண்ணில் எழுதுக.
..........................................................

24. 8705 ஐ எண் சட்டத்தில் காட்டுக.




25. ஒரு பிள்ளைக்கு 4 பிஸ்கட்டுகள் வீதம், 38 பிள்ளைகளுக்கு எத்தனை பிஸ்கட்டுக்கள் தேவை?
..........................................................

இல 26 முதல் 30 வரை சரியான விடையின் கீழ் கோடிடுக.

26. கீழே தரப்பட்ட உபகரணங்களும் வளி அமுக்கத்தை அளக்கப் பயன்படுவது யாது?



27. தரப்பட்ட குறியீடுகளில் கருமுகில் பரந்தவானத்தைக் குறிப்பது யாது?



28. பாலைவனக் கப்பல் எனப்படுவது.



T. அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்

37. ஈருடகப் பிராணி
1. மீன் 2. தவளை 3. காகம்

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

38. தேசிய கீதம் பாடப்படும் போது இரு கைகளையும் கீழே விட்டு நிமிர்ந்து நிற்றல் வேண்டும். (....)
39. வீதியின் இரு மருங்கிலும் வியாபாரம் செய்வது பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்காது (....)
40. வானவில்லில் ஒன்பது நிறங்கள் காணப்படும். (....)
41. சாடிகளில் பயிரிடுவதால் பயிர்கள் பாதுகாப்பாக இருக்கும். (....)


இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.

42. நன்றாக நீர் கொதிக்கின்ற வேளையில், அலுமினியத் தட்டொன்றை அதன் மீன் பிடித்தபோது அதில் நீர்த் துளிகள் படிந்து காணப்பட்டது. இதற்கான காரணம் நீர் கொதிக்கின்ற போது................ ஆவியாதல் ஆகும்.
43. கண்ணாடியின் மீது கொட்டப்பட்ட நீர் விரைவில் வழிந்து ஓடியது. அதற்கான காரணம் கண்ணாடியில் ................ பகுதி காணப்படாமையால் ஆகும்.


கீழே காட்டப்பட்ட வாக்கியங்களுக்கு பொருத்தமான விடையின் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.

| | |
|---|---|
| 44. முன்பு ஜனாதிபதியாக இருந்தவர் (.......) | |
| 45. இலங்கையின் தலைநகரம் (.......) | 1. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் |
| 46. எமது தேசிய மலர் (.......) | 2. ஆர். பிரேமதாசா |
| 47. பூமியில் ஏற்படும் இயற்கை நிகழ்வு (.......) | 3. சுனாமி |
| 48. இலங்கையில் வாழும் தமிழ் துடுப்பாட்ட வீரன் (.......) | 4. ஒராயன் |
| | 5. நீரோற்பலம் |
| 49. மிகப்பெரிய கோள் (.......) | 6. வியாழன் |
| 50. ஆறு நட்சத்திரங்களைக் கொண்ட நட்சத்திரக் கோலம் (.......) | 7. 94.8F |
| | 8. டி.பி. ஜாயா |
| 51. மலை நாட்டில் ஏற்படும் அபாயம் (.......) | 9. மண்சரிவு |
| | 10. வானவில் |
| 52. மனிதனின் சாதாரண வெப்ப நிலை (.......) | 11. முத்தையா, முரளிதரன் |
| 53. நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட நிலப்பரப்பு (.......) | 12. தீவு |

தரப்பட்ட படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை எழுதுக.

54. 

55. 1. 


2. 

கீழுள்ள சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

பென் நுளம்பு, எரிபொருள்கள், தாவரவுண்ணி, நீர், திசைகாட்டி, வான்பொருட்கள், ஒளிர்ப்பொருள், கறுவாப்பட்டை, உபகோள், பேன்)


56. டீசல், மண்ணெண்ணெய் என்பன................ எனப்படும்.
57. ................................ எமது குருதியை உறுஞ்சிக் குடிக்கும்.
58. பசு ஓர்................................ ஆகும்.
59. வானில் பல்வேறு................................ உள்ளன.
60. சந்திரன் ஓர்................................ ஆகும்.
61. மனிதனின் பல்வேறு தேவைகளுக்கு................ ................ பயன்படுகிறது.
62. ................................ ஒரு உணவு சுவையூட்டி ஆகும்.
63. காற்றின் திசையை அறிவதற்கு................................ உதவுகிறது.

* சுருக்கமான விடை தருக.



64. 1. இங்கு காணப்படும் உருவின் உச்சிகளின் எண்ணிக்கை?
2. விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

65. 20,000 எனும் எண்ணிற்கு இரண்டு எண்களின் பின்னால் வரும் எண் யாது?



66. இங்கு நிழற்றப்பட்ட பகுதி முழுப் பகுதியின் என்ன பின்னமாகும்?

67. மைதானமொன்றின் பரப்பளவு $180m^2$ எனின், அதன் ஒரு பக்க அகலம் 30m ஆகும். அதன் நீளத்தைக் காண்க.


68. ஒரு லீற்றர் மண்ணெய் ரூபா28.50 எனின், 2½ லீற்றர் மண்ணெயின் விலை யாது?

69. பெட்டியொன்றில் இடப்பட்ட மாபிள்கள் ஒரு முறை பொத்தானை அழுத்தினால் இரண்டு மடங்காகும். அப்பெட்டியில் 6 மாபிள்கள் இட்டு, 3 தடவைகள் பொத்தானை அழுத்தினால் இறுதியில் எத்தனை மாபிள்கள் பெற முடியும்?

70. ஒரு சாக்கினுள் உள்ள கிழங்குகளின் நிறை 13kg 800g ஆகும். அதில் 7kg 250g விற்ற பின்பு, எஞ்சிய கிழங்கின் நிறை யாது?




71. அஸ்வாக் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 3km 50m ஆகும். அஸ்வாக் பாடசாலையிலிருந்து 400m தூரத்திலுள்ள தபாற்கந்தோரில் வேலை செய்கிறார். அஸ்வாக் தனது வீட்டிலிருந்து தனது மகனை பாடசாலைக்கு நடத்திக் கொண்டு அழைத்துச் செல்வார். அஸ்வாக் தினமும் வீட்டிலிருந்து மகனை அவரது பாடசாலையில் விட்டு வேலைக்குச் செல்வது வழக்கம். மறுபடியும் பாடசாலைக்கு வந்து மகனை அழைத்துக் கொண்டு தபாற்கந்தோருக்கு வந்து வேலைகளை முடித்து மீண்டும் மகனுடன் வீட்டிற்குச் செல்வார். அஸ்வாக் ஒரு நாளைக்கு நடந்து செலலும் தூரத்தைக் காண்க.

72. 
இங்கு ஒரு கட்டம் 2cm நீளத்திலும் 2cm அகலத்திலுமான அதன் உண்மையான நீளம் 2cm=5m எனின் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.

❄ ஒரு பாடசாலையில் தரம் ஆறிற்கு அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தரம் 6 | ஏ | பி | சீ | டி |
|---|---|---|---|---|
| மாணவர்கள் | 36 | 38 | 32 | 34 |




73. எல்லாத் தரங்களிலும் ஆண் பிள்ளைகளுக்குச் சமமாக பெண்பிள்ளைகள் உள்ளனர். அதன்படி வரைபினைப் பூரணப்படுத்துக.

74. பாடசாலைக்கு அனுமதித்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

75. வகுப்பறையில் இருக்கவேண்டிய மாணவர் தொகை 40 எனின், இப்பாடசாலைக்கு மேலும் எத்தனை மாணவர்களுக்குத் தரம் ஒன்றுக்கு சேர்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளது?

76. இப்பாடசாலையில் தரம் ஆறில் காணப்படும் சமாந்தர வகுப்புகளின் எண்ணிக்கை யாது?

❄ பின்வரும் நிகழ்வினை நான்கு சொற்களுக்கு குறையாத பொருத்தமான எழுவாய் பயனிலையுடன் ஆறு வசனங்களில் எழுதுக.

சிங்கமொன்று நகரைச் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டது. காட்டிலுள்ள நண்பர்களிடம் தனது ஆசையைக் கூறியது. நண்பர்கள் நகருக்குச் செல்ல வேண்டாம் என்று புத்திமதி கூறினார்கள். சிங்கம் அவர்களின் புத்திமதியைக் கேட்கவில்லை.


01)................................................
02)................................................
03)................................................
04)................................................
05)................................................
06)................................................


## வினாத்தாள் 02

▶ இல 01 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக.



01. பின்னங்களை எழுதுவது............ + ............ = ....................

02.  படத்திலே தரப்பட்டது 5 இற்கு சமனாகுமா? ............

03.  தரப்பட்ட மாபிள்களை சதுர எண்ணாக அமைக்குக.........

04. 3cm இடைவெளியில் எட்டு போத்தல்கள் வட்டமாயும், நேர் கோடாயும் அடுக்கப்பட்டு உள்ளன. எது கூடுதலான நீளத்தைக் காட்டும்.
1. உரு ○○○○○○○○ 2. உரு 00000000

05. ஆமையும் முயலும் ஓட்டப் போட்டியில் இரண்டும் ஒரே நேரத்தில் எல்லையை அடைந்தன. எது கூடியதூரம் ஓடியது?

06. இலங்கையின் நாணயக் குற்றிகளின் ஒன்றில் இலங்கையின் ஆண்டு விழா ஒன்று குறிக்கப்பட்டது. அது எத்தனையாவது ஆண்டு விழா?

07. வித்தியாசமான ஒரு அம்சத்தைக் கொண்ட கோள் யாது?

08. புவிக்கு எத்தனை துணைக்கோள்கள் உண்டு?

09. இந்தியாவின் தேசிய மலர் யாது?

10. உடலிலும், கடலிலும் இருப்பது யாது?

▶ இல 11 முதல் 15 வரை சரியான விடையின் கீழ் கோடிடுக.



தமிழக ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' ஓவியக் கண்காட்சியும், கருத்துப் பகிர்வும் நேற்று யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றுவதையும், ஓவியர் புகழேந்தி பொதுச் சுடர் ஏற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நாடாவை வெட்டி நிகழ்வை ஆரம்பிப்பதையும், ஓவியங்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு லீட்ஸ் நிறுவனம் வீடமைப்பு உதவி!

யாழ்ப்பாணம்—

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதி மக்களுக்கு 500 நிரந்தர வீடுகளை அமைக்க லீட்ஸ் அமைப்பு முன்வந்துள்ளது.

ஒவ்வொரு வீடுகளும் இரண்டு அறை, கோல், சமையல் அறை மலசலகூடம் உள்ளடங்கலாக 500 சதுர பரப்பைக்கொண்ட 5.5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இவை தவிர இந்த அமைப்பினரால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதி மக்களுக்கு மலசலகூடம் , சமையல் அறை, கிணறு, பொதுமண்டபம் போன்றனவற்றை அமைத்து வருகின்றது. இதுவரை 35 ஆயிரம் ரூபா பெறுமதியான 94 மலசலகூடங்களை கற்கோவளம் பகுதியிலும், 6 மலசலகூடங்களை பொலிகண்டி கிழக்கிலும், 4 மலசலகூடங்களை பொலிகண்டி தெற்கிலும் அமைத்துவருகின்றன.

இவைகளோடு கற்கோவளம் பகுதியில் 60' நீளம் 30' அகலம் கொண்ட ஒரு பொது மண்டபத்தையும், பொலிகண்டி கிழக்கில் 2 கிணறுகளையும், பொலிகண்டி தெற்கில் 2 கிணறுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளனர் என லீட்ஸ் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் குணரட்னம் தெரிவித்தார். (20)

# வங்கியில் மீளப்பெற்ற பணத்தை திருடிக்கொண்டு ஓடிய சிறுவன்!

## யாழ்.நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம்—

யாழ்.நகரில் உள்ள வங்கி ஒன்றில் பணத்தை மீளப்பெற்ற ஒருவரிடமிருந்து பணத்தை அபகரித்துக்கொண்டு தப்பிச் செல்ல முயன்ற சிறுவன் ஒருவன் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

நேற்றுமுன்தினம்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வங்கியில் மீளப்பெற்ற பணத்துடன் வீட்டுக்குச் செல்ல முற்பட்டவரிடமிருந்து, பணத்தை அபகரித்துக்கொண்டு ஓடிய சிறுவனை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்.

இதன்பின்னர் நேற்று முன்தினம்சிறுவன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டான்.

இதேபோன்று சிறுவர்களைப் பயன்படுத்தி திருடப்படும் சம்பவங்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# விடுமுறைக்கால சித்திரப் பயிற்சி

யாழ்ப்பாணம்—

ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனம் விடுமுறைக் காலத்தைப் பயனுள்ளதாக்க வ மை போல இலவச சித்திரப் ப ற்சியொன்றை எதிர்வரும் ஜூன் 13 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

# எஸ்.பி. கிருஷ்ணனின் 'இனி வசந்த காலம்' சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா!




யாழ்ப்பாணம்—

எஸ்.பி.கிருஷ்ணனின் 'இனி வசந்த காலம்' சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலக்கிய நண்பர்களால் நடத்தப்படவுள்ள இந்த வெளியீட்டு விழா நிகழ்வில் தலைமை உரையை நமது ஈழநாடு பிரதம ஆசிரியர் ராதேயனும், வரவேற்புரையை கவிஞர் செல்வமும், வாழ்த்துரையை சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், கலாநிதி.க.குணராசா ஆகியோரும், வெளியீட்டுரையை மு.வளநாடனும், ஆய்வுரையை எழுத்தாளர் யோசெப் பாலாவும் நிகழ்த்தவுள்ளனர்.

# இளங்கலைஞர் மன்றத்தில் வில்லிசை நிகழ்வு

யாழ்ப்பாணம்—

அகில இந்திய சத்யசாயி மன்றங்கள் அளிக்கும் தமிழ்நாடு அரசு கலைமாணிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லிசையில் 'சத்ய சாயி பகவானின் வாழ்வும் போதனைகளும்' எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வை ஆன்மீக நாட்டமுள்ள அனைவரும் கண்டுகளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (111)

# அலுமினிய தளபாடங்கள் அமைப்பது குறித்து யாழ்.செயலகத்தில் ஒருநாள் பயிற்சி!

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் தரமான முறையில் பொருத்தமான நியம அலுமினியச் சட்டங்களைப் பயன்படுத்தி கதவு, யன்னல் போன்றவற்றைச் செய்வோர் அரிதாகக் காணப்படுவதால் இதில் ஈடுபடுவோருக்கும், பயில விரும்புவோருக்கும், இவற்றை நிறைவேற்றும் அரச திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் இந்தத் துறையில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த, அனுபவம் மிக்கவர்களினால் செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

இந்தப் பயிற்சி நெறி யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் முழுமையாக ஒரு நாள் நடைபெறவிருக்கின்றது. இதற்கு கொழும்பு மகா வித்தியாலய மாவத்தையைச் சேர்ந்த ஏசியன் ஹாட்வெயர் ஸ்தாபனத்தினர் அனுசரணை வழங்குகின்றனர்.

இதில் பங்குபற்றுபவர்களுக்கு சிற்றுண்டி, மதிய போசனம் இலவசமாக வழங்கப்படுவதுடன், பயிற்சி நெறியில் பங்குபற்றியமைக்கான சான்றிதழுடன் அலுமினிய இணைப்புகளின் விளக்கக் கையேடும் வழங்கப்படவிருக்கிறது.

இந்தப் பயிற்சி நெறிக்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதால், பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது பெயர்களை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள மாகாண கட்டட பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்து தமது அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

# பருத்தித்துறை வைத்தியசாலையில் கலந்துரையாடல்

பருத்தித்துறை—

எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் - வைத்தியசாலை அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும், அபிவிருத்திக் குழுத் தெரிவும் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த வைத்தியசாலை அபிவிருத்தியில் அக்கறையுள்ள கல்விமான்கள், வர்த்தகர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் பங்குகொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்ளையும், ஒத்துழைப்பையும் வழங்குமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# கலந்துரையாடல்

பண்ணாகம்—

வலி.மேற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த கலந்துரையாடல் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பிரதான மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு வலி.மேற்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கையிலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# வடமாகாணத்தில் சுகாதார பரிசோதகர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்—

வடமாகாண சுகாதாரப் பரிசோதகரின் நன்மை கருதி, வடமாகாண சுகாதார பரிசோதகர் சங்கமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தோர் அங்கம் வகிக்கின்றனர்.

இதன் தலைவராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனும், செயலாளராக வவுனியாவைச் சேர்ந்த சிவபாலனும், பொருளாளராக மன்னாரைச் சேர்ந்த வின்சனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வது போன்ற செயற்பாடுகளை இந்தச் சங்கம் முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நெல்லைப் பதப்படுத்தும் முறைபற்றி விளக்கமளிக்குமாறு கோரிக்கை!

பண்டத்தரிப்பு—

'பாசுமதி' நெல்லைப் பதப்படுத்தும்முறை பற்றிய விளக்கங்களை தமக்கு வழங்குமாறு பண்டத்திப்பு விவசாய சம்மேளனத்தினரால் - கீரிமலை விவசாயப் போதனாசிரியர் திருமதி மணிவர்ணணிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறுது.

'பாசுமதி' நெல்லை உற்பத்தி செய்து அதன்மூலம் நல்ல விளைச்சலைப் பெற்றுள்ளபோதும் அதனைப் பதப்படுத்தும் முறைபற்றி போதிய விளக்கம் இன்மையால் இந்த நெல்லைப் பதப்படுத்தும் முறை பற்றிய போதிய விளக்கங்களை விவசாயத் திணைக்களம் வழங்க வேண்டும்.

இந்தப் பயிற்சி வகுப்புக்கு விரைந்து தாங்கள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு உடனடியாக ஆவணசெய்யவேண்டும் என விவசாய சம்மேளனம், விவசாய போதனாசிரியரிடம் தெரிவித்துள்ளது. (44)

# ஓவியர் 'புகழேந்தி' கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் தமிழக ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' ஓவியக் கண்காட்சி தொடர்பான ஓவிய மதிப்பீடும், ஓவியக் கருத்துரையும், கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓவியர் புகழேந்தியின் இந்த ஓவியக் கண்காட்சியானது தொடர்ந்து நாளையும், நாளை மறுதினமும் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் நடைபெறவுள்ளன. இந்த மூன்று தினங்களும் ஓவியங்களைப் பார்வையிட்டவர்களிடம் கருத்துக் கணிப்புகள் எடுக்கப்பட்டு அவை தொடர்பாக ஓவியருடன் ரசிகர்கள் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.

# நவாலி கிழக்கு - மேற்கு விவசாய வீதியால் கனரக வாகன போக்குவரத்தை தடைசெய்யவும்

## விவசாய சம்மேளனத்தினர் கோரிக்கை

மானிப்பாய்—

நவாலி கிழக்கு, நவாலி தெற்கு ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட விவசாய வீதியால் கனரக வாகனங்களின் போக்குவரத்தைத் தடைசெய்யுமாறு அந்தப் பகுதி விவசாய சம்மேளனத்தினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் அமைந்துள்ள விவசாய வீதிகளில் கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதால் வீதி மிக விரைவாகச் சேதமடை கின்றன. இவ்வாறு அடிக்கடி இந்த தி கள் பழுதடைவதால் விவசாயிகள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படும் நிலை ஏற்படுகின்றது.

எனவே, இந்த வானங்களைப் பிரதான வீதியினூடாகப் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த விவசாய வீதியினைப் பாதுகாக்குமாறு விவசாய சம்மேளனத்தினர் -பிரதேச செயலரிடம் கேட்டுள்ளனர். (44)

இயற்கை இன்பம் ஈழில்லாத்தாய் மனம்!
இயற்கை அழித்தால் அனைத்தும் துயரம்!!

# விடுதலைப் புலிகள் போராட்டத்தை மட்டுமன்றி சகல துறைகளையும் முன்னெடுக்கின்றனர்

## அக்கராயன் தேசிய எழுச்சிப்பேரவை செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி

தமிழீழ விடுதலைப் புலிகள் தனியாகப் போராட்டத்தை மட்டுமல்லாமல், சகல துறைகளையும் முன்னெடுத்து வருகின்றனரென அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சபாரத்திளனம் தெரிவித்தார்.

அக்கராயன் பிரதேச மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

எமது தமிழீழ மாணவர்களை பார்க்கும்போது - இன்று தமிழீழ கல்விக்கழகம், தமிழீழ மாணவர் அமைப்பு போன்றவைகளின் செயற்பாடுகளால் கல்வி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. அந்த வகையிலேயே தான் இன்று இந்த முன்பள்ளிகளுக்கானதும், மாலை நேரக் கல்வி கற்கும் மாணவர்களுக்கானதுமான சூரிய மின்கலன்கள் வழங்கப்படுகின்றன. இந்த வறிய மாணவர்கள் தமது மேலதிகக் கல்வியை இரவு நேரங்களிலும் கற்பதற்கு இது மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும்.

இதனை வழங்கியவர்களுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதேபோன்று புனர்வாழ்வுக்கழக பொருண்மியம், ஊரக வளர்ச்சி எனப் பல தரப்பட்ட அமைப்புகளும் எமது மக்களுக்கு பல வழிகளில் எந்த நேரத்திலும் உதவி புரிந்த வண்ணமேயுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைத் துணைச் செயலாளர் ஜெயபாலன் தலைமையில் அக்கராயன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்ட ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் ஈழவன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச் சுடரை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்து மலர் மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் மாலை நேரக் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கும், முன்பள்ளி சிறார் களுக்கும் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக 9 சூரிய மின்கலத் தொகுதிகள் வன்னி ரெக் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் நினைவுரைகளை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன் ஆகியோர் நிகழ்த்தினர். (நா)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தின் விளையாட்டு மைதானத்தில் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

இராமநாதபுரம்

வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், இராமநாதபுரம் விவசாய மக்களும் இணைந்து மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை நடத்தினர்.

இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1 மணியளவில் வட்டக்கச்சி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை வட்டக்கச்சி அரசியற்துறையைச் சேர்ந்த இராமஜெயம், கிளிநொச்சி மாவட்ட மாட்டுவண்டில் சங்கத் தலைவர் ஐயம்பிள்ளை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பொறுப்பாளர் சிவகுமார் ஏற்றிவைத்தார். இந்தப் போட்டி அ, ஆ, இ, ஈ ஆகிய பிரிவுகளாக இடம்பெற்றன. இதில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு:-

அ.பிரிவு

1ஆம் இடம் - மு.செந்தில்குமார் (பிரமந்தனாறு), 2ஆம் இடம் - சி.பானுசன் (வற்றாப்பளை), 3ஆம் இடம் - இ.அப்பன் (உடையார்கட்டு)

ஆ.பிரிவு

1ஆம் இடம்-க.சிறிதரம் (பூநகரி), 2ஆம் இடம்-க.சுஜீவன் (தட்டுவன்கொட்டி), 3 ஆம் இடம் -ஜோச்ஜெயசீலன் (பன்ணங்கண்டி)

இ.பிரிவு

1ஆம் இடம்-ஆ.ரவி (பன்னங்கண்டி), 2ஆம் இடம்-ப.நவநீதன் (வட்டக்கச்சி), 3ஆம் இடம்- சி.கதிர் (வட்டக்கச்சி)

ஈ.பிரிவு

1ஆம் இடம்-மு.செந்தில்குமார் (பிரமந்தனாறு), 2 ஆம் இடம் -த.ஜெயகன் (விசுவமடு), 3ஆம் இடம் வே.பிரபாகரன் (முரசுமோட்டை)

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ராசன், விளையாட்டுத்துறையின் தொலைக்காட்சி ஊடக இணைப்பாளர் தேவன், விளையாட்டுத்துறையின் நடுவர்களில் ஒருவரான பரஞ்சோதி, மாட்டு வண்டிச் சவாரி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் போராட்டத்தன்மையை வெளிப்படுத்துகின்றன

## மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவிப்பு

கிளிநொச்சி

ஈழத் தமிழ் மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் உறவுப் பாலமாக ஓவியர் புகழேந்தியின் பயணம் அமைந்ததென, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவிய மதிப்பு அரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

தமிழக மக்களும், தமிழீழ மக்களும் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைகளினால் பிரிந்து வாழ்கின்ற நிலையிலுள்ளனர். இருப்பினும் மன ரீதியான உறவு நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அந்த நிலை பலப்பட்டு வருகின்றது.

ஈழத் தமிழ் மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் உறவுப் பாலமாக புகழேந்தியின் பயணம் அமைந்தது. அவருடைய வருகை எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் அர்ப்பணிப்புக்களையும், தியாகங்களையும் வெளிப்படுத்துபவகையாக புகழேந்தியின் ஓவியங்கள் விளங்குகின்றன.

தமிழகத்தில் மக்கள் மத்தியில் எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை புகழேந்தியின் ஓவியங்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றன. அத்துடன் சர்வதேசத்திலும் விடுதலைப் போராட்டத்தின் யதார்த்த நிலையை இவருடைய ஓவியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழகத்திலிருந்து தனது ஓவியங்களுடன் விடுதலைப் போராட்டங்கள் நடக்கும் எமது மண்ணிற்கு வருகை தந்த கலைப்போராளி புகழேந்தியை எமது மண்ணும், மக்களும் அன்புடன் அரவணைத்துக் கொள்கின்றனர்.

தமிழக மக்களும், தமிழீழ மக்களும் இரத்த உறவுகள். அதனை எந்தச் சக்தியாலும் பிரித்துவிட முடியாது. அண்மைக் காலமாக இந்தியா எம்மைப் புறக்கணித்து வருகிறது. இருப்பினும் தமிழக மக்களுக்கும், தமிழீழ மக்களுக்குமிடையிலான உறவு வலுப்பெற்று வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கரும்புலிகளின் நினைவுத் தூபிக்கு பரந்தனில் அடிக்கல் நாட்டும் வைபவம்

பரந்தன் - குமரபுரம் கிராமத்தில் கரும்புலிகளின் நினைவுத் தூபிக்கான அடிக்கல் நாட்டுவிழா வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரை மாவீரன் ரெனோல்டின் தந்தை இராமசாமி மற்றும் ந.மகேந்திரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் நினைவுத் தூபிக்கான அடிக்கல்லை கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் ப.ஆனந்தராஜா, மருந்தக உரிமையாளர் கண்ணன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் - 08

1695: ஒளியின் அலைக் கொள்கையை நிறுவியவரும், சனிக்கிரகத்தின் வளையங்கள் பற்றியும், சனிக்கிரகத்தின் பெரிய நிலாவான "டைட்டான்" பற்றியும் கண்டறிந்து கூறியவருமான கிறிஸ்டியன் ஹ்யூஜென்ஸ் காலமானார்.

1723: "வேளாண்மை அறிவு அபிவிருத்தி செய்வோர் கழகம்" என்ற கழக அமைப்பொன்று ஸ்கொட்லாந்தில் நிறுவப்பட்டது.

1809: ஆட்சியாளர்கள் மக்களால் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து, எழுத்துக்களால் புரட்சி செய்தவரும் மனித உரிமைகள் என்ற நூலை முதன் முதலாக எழுதி, சொந்த நாடான இங்கிலாந்திலிருந்தே துரத்தப்பட்டவரும், அமெரிக்கா சென்று அங்கும் குடியேற்ற ஆதிக்கத்துக்கு எதிராக கொமன் சென்ஸ் என்ற துண்டுப் பிரசுரம் மூலம் விடுதலை விழிப்புணர்வை ஏற்படுத்தியவருமான தோமஸ் பெயின் என்ற புரட்சி எழுத்தாளர் நியூயோர்க்கில் காலமானார்.

1881: நிலக்கரிச் சுரங்கத்தில் பயன்படுத்தக்கூடிய மின்சார சுரங்க விளக்கு - இங்கிலாந்தில் மான்ஸ் பீல்ட்டில் உள்ள ஒரு சுரங்கத்தில் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

1885 : அரிய மண் மூலங்களான பிராஸியோடைமியம், நியோடைமியம் என்பவற்றைக் கண்டுபிடித்துள்ளதாக அவுர்வான் வெல்ஷ்பாக்லியன்னா, அக்கடமி ஒவ் சயன்ஸ் அமைப்பிற்கு அறிவித்தார்.

1905: போரில்லாமல் அமைதியாக வாழ மக்கள் விரும்புகின்றனர். எனவே போரை நிறுத்தி சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பியுங்கள். அதற்கு நானும் உதவுகிறேன் என அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜப்பானுக்கும், ரஷ்யாவுக்கும் கடிதம் எழுதினார்.

1915: பிரிட்டிஷ் போர் விமானங்கள் ஜேர்மனியின் ஸெப்பலின் விமானத்தைத் தாக்கி அழித்தன.

1918: சோவியற் அரசு தனது நாட்டிலுள்ள நேசப் படைகளை வெளியேறும்படி கட்டளையிட்டது.

✦: ஆர்மினியாவுடனும், ஜோர்ஜியாவுடனும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதன் மூலம் துருக்கி அந்த நாடுகளது விடுதலையை அங்கீகரித்தது.

1919: ருமேனியாவில் வாழும் ஜேர்மனிய மக்கள் ஒன்றிணைந்து, ஒரு தனி அரசியல் கட்சியை ஆரம்பித்தனர்.

1920: இத்தாலியில் பாணின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாடெங்கும் பாண் கழகம் ஏற்பட்டது.

1928: ஜூன் 7ஆம் திகதி பீஜிங் நகர் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, சீனா முழுவதும் சியாங்கோ ஷேக்கின் தேசியக் கட்சியின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

1929: யங் இழப்பீட்டுத் திட்டப்படி ஜேர்மனி கொடுக்க வேண்டிய போர் இழப்பீட்டுக் கால வரம்பு 1988 வரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தது.

1940: கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 93 ஆவது மூலகமாக நெப்டூனியம் என்னும் மூலகம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

1965: லூனா-6 என்ற விண்கலம் ஏவப்பட்டது. இது நிலாவில் இறங்க முயன்றபோது ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக, இலக்கை விட்டு 1,60,000 கி.மீ. விலகிப்போய்விட்டது.

1975: வெனீரா-9 என்ற விண்கலம் வெள்ளிக்கிரகத்தை நோக்கி ரஷ்யாவினால் அனுப்பப்பட்டது. வெள்ளிக்கிரகம் பரப்புத் தொடர்பான தொலைக்காட்சிப் படத்தை முதன் முதல் பூமிக்கு இந்த விண்கலம் தான் அனுப்பிவைத்தது.

1993 : லைபீரியத் தலைநகரான மான்ரோவியாவில் ஒரு றப்பர் தோட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 250 பேரை படையினர் கொன்று தீ மூட்டினர்.

✦: பதவியைத் தவறாகப் பயன்படுத்தியதாகவும், ஊழல் புரிந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு, பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஹீசைன் முகமது எர்சாத்திற்கு ஏழு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2002 : முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர்- வன்னியில் விடுதலைப்புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பிக்குகளின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் சிங்கள இனவெறியைத் தூண்டும் நடவடிக்கையே...!

இன்னமும் எந்தவொரு தீர்மானத்துக்கும் அரசால் வரமுடியாத இழுபறி நிலையில் இருக்கும் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை வைத்து, அரசியல் பண்ண நினைக்கும் பேரினவாதக் கட்சிகள் மற்றும் ஏனைய குழுக்களின் நகைப்புக்கிடமானதும், நாட்டில் குழப்பத்தையும், இனங்களுக்கிடையே மோதல் நிலையை உருவாக்கும் நோக்கிலானதுமான சத்தியாக்கிரகம் என்ற பெயரிலான நடவடிக்கைகள் கண்டி தலதாமாளிகையின் முன்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றுமேயற்ற -மனிதாபிமானப்பணிகளை ஒழுங்குபடுத்தும் செயல்முறையை நெறிப்படுத்தும் அமைப்பான பொதுக் கட்டமைப்புக்கு அரசியல் நோக்கம் எதுவும் இருக்கப்போவதில்லை என்பதைத் தெரிந்து கொண்டும், அதனை அரசியல் ஆதாய நோக்கில் கையாளத்தொடங்கியுள்ள பௌத்த சிங்கள இனவாதிகள் கண்டியில் நடத்த ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரகத்தின் இலக்கு - தமிழர்களுக்கு எதிராக மீண்டுமொரு கொடிய யுத்தமொன்றை மேற்கொள்வதற்கான அச்சமூட்டும் சூழலை உருவாக்குவதேயாகும்.

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர்களான பௌத்த பிக்குமார்களே இந்த பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தினை 'சாகும்வரை உண்ணாவிரதம்' என்ற கொந்தளிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பதாகைகளுடன் ஆரம்பித்துள்ளதைப் பார்க்கும் போது, பௌத்த சிங்கள மக்களிடையே தமிழ் மக்களுக்கெதிரான இனவன்முறையை கட்டவிழ்த்து விடுவதற்கான மற்றுமொரு முயற்சியை ஆரம்பித்துவிட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

பௌத்த சிங்கள பெருந்தேசிய இன மேலாதிக்க சிந்தனைப் போக்கின் சின்னமாக தென்னிலங்கை ஆட்சியாளர்களால் காலம் காலமாய் அடையாளப்படுத்தப்பட்டு வரும் தலதாமாளிகை - இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு காலகட்டங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவன்முறைகளின் உயிர்ப்பு மையமாக இருந்து வந்துள்ளதை அனைவரும் அறிவர்.

பண்டா - செல்வா உடன்பாட்டை எதிர்த்து ஜே.ஆர். ஜெயவர்த்தன நடத்திய இனவன்முறைக்கு முதல் களமமைத்துக்கொடுத்த பாதயாத்திரை என்ற பெயரிலான பேரினவாதிகளின் அணிவகுப்பும், கொழும்பிலிருந்து கண்டி தலதாமாளிகை நோக்கி மேற்கொண்டதொன்றாகவே அமைந்ததை இச்சமயத்தில் நினைவில் கொள்வதும் அவசியமாகும்.

தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்நில உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்த இலங்கையின் சகல அரசியல் யாப்புகளும், கண்டி தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்தில் வைத்தே மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டதும் அதற்கான அஸ்கிரிய - மல்வத்தை பீடங்களின் ஆசீர்வாதம் பெறப்பட்டதும்கூட நினைவிருக்கலாம்.

சுதந்திரதினப் பொன்விழா ஆண்டின் நிகழ்வுகளை 1998 பெப்ரவரி நாளில் இதே தலதா மளிகையின் முன்னால் வைத்து கோலாகலமாகக் கொண்டாடத் திட்டமிட்டதையும், அதன்போது ஜெயசிக்குறு நடவடிக்கைமூலம் கண்டி வீதி முழுதாகக் கைப்பற்றப்பட்டு யாழில் இருந்து புறப்படும் பேருந்து சிங்கக் கொடியுடன் அன்றையதினம் கண்டியை வந்தடையும் என்று திமிருடன் அப்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கூறியதையும் எவரும் மறக்கவே முடியாது.

ஆனாலும், அவரின் அறைகூவல் வெறும் கேவலமாக முடிந்தகதை வேறுவிடயமாகும்.

இங்கேயும் தலதா மாளிகை பேரினவாத மேலாதிக்கத்தின் ஒரு குறியீட்டுச் சின்னமாகவே அடையாளப்படுத்தப் பட்டது.

இப்படிப் பல உதாரணங்களைக் கூறமுடியும்.

இப்போது ஹெல உறுமய பிக்குகளும் தமது சத்தியாக்கிரக - சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பிப்பதற்காக தேர்ந்தெடுத்த இடமும் தலதா மாளிகையாகவே உள்ளது.

அன்பு, இரக்கம், சாந்தி, சமாதானம், கருணை என மனித வாழ்வுக்கான மகோன்னத குணங்களைப் போதித்த புத்த பகவானின் 'தம்மபத' சுவடுகளை அடியொற்றிச் செல்வதாகப் பீற்றிக்கொள்ளும் பிக்குமார்கள், மனிதாபிமானப் பணிக்காக இன்னமும் உருவாக்கப்படாத பொதுக்கட்டமைப்பை எதிர்த்து உண்ணாவிரதப்போராட்டத்தை சாகும்வரை தொடரப்போவதாக புத்தபகவானின் புனித சின்னங்கள் பேணப்படும் தலதா மாளிகையின் முன்னர் ஆரம்பித்துள்ளது முரண்நகையான விடயமாகும்.

அவர்களின் இந்த மூன்றாந்தர அரசியல்வாதிகளுக்குரிய குணாம்சமானது அவர்கள் அணிந்த மஞ்சள் அங்கியை அவர்களே அவமானப்படுத்துவதாக உள்ளது என்றே தோன்றுகிறது.


ஆனாலும், இது ஒன்றும் தமிழ் மக்களுக்கு புதிரானதோ, புதுமையானதோ அல்ல...

தேரர்களின் இந்த சாகும்வரை உண்ணாவிரத நடவடிக்கை அரசுக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடும்.

தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் இவைபோன்ற சம்பவங்கள் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தப்போவது கிடையாது.

எனினும், அவர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமானது தமிழ் மக்களின் மனித உரிமைகளை சாகடிப்பதற்கான போராட்டமாகவே இருக்கும் என்பதையும் இங்கு சொல்லாமலிருக்க முடியவில்லை.

## நாடும் நடப்பும்




செய்தி:-
வண.ஓமல்பே சோபித தேரர் எம்.பி சாகும்வரை உண்ணாவிரதம்

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கோடரிக் காம்பின் பெயரால் அப்பாவி தமிழ் இளைஞர்கள் கொலையாவதா?

கலியாணத்துக்காக கனடாவிலிருந்து வரும் உறவுப் பெண்ணை அழைத்து வருவதற்காகக் கொழும்புக்குச் சென்ற இரு இளைஞர்கள் கொழும்பில் போய் இறங்கியதும் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர் என்று கேட்டபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

நான் என்ன நினைக்கிறது? எந்தத் தீய செய்தியானாலும் புலிகளுடன் முடிச்சுப்போட்டு வெளியிடும் கொழும்பு ஆங்கிலத்தினசரியொன்று புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவரை கருணாகுழுவினர் கொலை செய்ததாகத் தெரிவித்திருக்கிறது என்றேன்.

இந்தச் செய்திக்குப் பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பெயர் சொல்லாமல் ஆதாரமும் காட்டியிருக்கிறது. விசாரணை எதுவும் நடைபெறுவதற்கு முன்னரே கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் இந்தக் கொலைகளைச் செய்திருக்கிறார்களென்று இந்தப் பத்திரிகையின் நிருபர் எழுதியிருக்கிறார். அப்படியானால் சுட்டுக் கொலை செய்தவர்கள் பற்றி இந்த நிருபருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அல்லது இவருக்கு இந்தக் தகவலைக் கொடுத்த பொலிஸ் உத்தியோகத்தருக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்தக் கொலைகள் பற்றி விசாரணை செய்யும் குற்றப் பிரிவுப் பொலிஸார், இந்த பத்திரிகை நிருபரையும் இவருக்குத் தகவல் கொடுத்ததாகக் குறிப்பிடப்படும் பொலிஸ் அதிகாரியையும் முதலில் விசாரிக்க வேண்டும் என்று பரமசிவம் சொன்னார்.

சுட்டுக் கொல்லப்பட்ட இரு இளைஞர்களும் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் என்று மற்றொரு கொழும்பு ஆங்கிலத் தினசரி முதல் பக்கத்தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது என்றேன்.

கொழும்பில் சுட்டுக் கொல்லப்படுபவர்கள் புலிகள் என்று இந்த ஊடகங்கள் முடிவு கட்டிவிடுகின்றன போலும். இதேநேரம் இவர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் விடுதலைப்புலிகளிலிருந்து போன கருணாவைச் சேர்ந்தவர்களென்றும், இந்த ஊடகங்கள் கொலை நடந்ததும் உடனடியாகவே செய்திகளை வெளியிடுகின்றன. இவர்களுக்கு எப்படி இந்த விபரங்கள் தெரிகின்றன. எங்கேயிருந்து இந்தத் தகவல்களை இவர்கள் பெற்றார்கள்?இப்படி ஆதாரமில்லாமல் செய்திகள் வெளிவருவதால் கொழும்புக்குப் போய் இறங்கும் தமிழ் இளைஞர்களும், கொழும்பில் தங்கி நிற்கும் இளைஞர்களும் 'புலிகளின் புலனாய்வுப் பிரிவினர்' என்ற சந்தேகத்தின் மீதே சுட்டுக்கொல்லப் படலாம். யார் எதற்காக என்றில்லாமல் எவரையும் சுட்டுக் கொல்லலாம், சுட்டவர்கள் அடையாளம் காணப் படாமலே கருணா குழுவைச் சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லிக் கதையை முடித்துவிடலாம் என்றார் பரமசிவம்.

ஆசை காட்டி கோடரிக்காம்பாக மாற்றப்பட்டதைத் தவிர இது வரை தமிழ் மக்களுக்காக கருணா உருப்படியாக என்ன செய்திருக்கிறார்? என்றேன்.

குருநகரிலிருந்து கொழும்புக்கு வந்து இறங்கிய அப்பாவித் தமிழ் இளைஞர்கள் போல இதுவரை பல இளைஞர்கள் அநியாயமாக கருணாவின் பெயரால் கொல்லப்பட்டதைத்தவிர கருணாவின் பெயரால் எந்த நல்ல காரியம் நடந்திருக்கிறது? இந்தக் கொலைகள் கூடக் கருணாவுக்குத் தெரியுமோ? தங்கள் வலையில் விழுந்த கருணா, தாங்கள் அவர் பெயரில் எது செய்தாலும் எதுவும் செய்யமுடியாது, தங்களைவிட்டு வெளியே போகவும் முடியாது, என்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். கருணாவையே அவர்கள் சுட்டுக் கொன்றாலும் கூட உண்மை வெளியே தெரியாமலும் போகலாம். கருணா இப்போது உயிருடனிருந்தால் அதுவும் சுயமாகச் சிந்திக்கும் நிலையிலிருந்தால் தமிழீழத்துக்கு அவர் செய்யக் கூடிய ஒரே நன்மை 'எனது பெயரால் செய்த கொலைகள் எல்லாம் போதும். கொலைகளை நிறுத்துங்கள்' என்று அறிவித்துவிட்டு வெளிநாடு ஒன்றில் போய் தஞ்சம் கோரலாம் அல்லது வெளிநாடு ஒன்றில் போய் நின்று இந்த வேண்டுகோளை விடலாம் என்று பரமசிவம் சொன்னார்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சியிலேயே கருணாவினால் எதுவும் செய்ய முடியவில்லை. தமிழீழம் முழுமையாகக் கிடைப்பதைத் தாமதப்படுத்தியதைத் தவிரவும் தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுவதற்கும் காரணமாக இருந்ததைத் தவிர கருணா என்ன செய்ய முடிந்தது? என்று கேட்டேன்.

தமிழர் தாயகத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்கவும் மனம் இரங்கி வெளிநாடுகள் பலவும் உதவிசெய்தன. இதைப் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்குக் கூட சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகள் அனுமதிக்கிறார்களில்லை. 1956 , 1958 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டுவரை இனப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக இன அழிப்பில் ஈடுபடுவதற்கு இனியும் கருணா காரணமாக இருக்க வேண்டுமா? தான் சுதந்திரமாக நடமாடுவதற்கே ஒரு பரப்பு நிலத்தைக் கூட விடுவித்து வாழ முடியாதவர் - கிழக்கு மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க முடியுமா? இவர் பெயரைச் செல்லித் தமிழீழத்தைப் பிரிக்கமுனையும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளுக்கு இனியும் இவர் உடந்தையாக இருக்கவேண்டுமா? சந்திரிகா அம்மையாரின் ஆட்சி கவிழ்ந்தாலும், அடுத்து ஆட்சிக்கு வருவதும் சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்துக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் கருணா தனது சிக்கலிலிருந்து விடுபட்டு எந்த நாட்டிலாவது ஒதுங்கிக் கொண்டு வழிவிட்டு வாழ்த்தி விடை பெறுவதே நல்ல மார்க்கம் என்று சொன்னார் பரமசிவம்.

இப்பொழுதே அப்பாவிகளை சுட்டுக் கொன்றுவிட்டு புலிப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். இந்த நிலையிலும் புலி எதிர்ப்புப் பிரசாரத்துக்கு வானொலியிலும், வார இதழ்களிலும் குசுகுசுப் பேச்சுக்களிலும் குறைவில்லை. போதாக்குறைக்கு சங்கரியார் வெளிநாடுகளிலும் போய் ஊதுகிறார். தேர்தல் வந்தால் தேர்தல் பிரசாரங்களும் இப்படித்தானே இருக்கும். இனவெறிக்கூச்சலும் சேர்ந்து என்றேன்.

யார் என்னதான் சொன்னாலும், எதிர்ப்பிரசாரம் செய்தாலும் - தமிழர்களும், தமிழ் இளைஞர்களும் - சிங்களவர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும், ஆட்சியிலிருப்போருக்கும் விடுதலைப்புலிகளாகத்தான் தெரிவார்கள். என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றேன்.

இப்படிப் புலிப்பட்டம் பெற்றுப் பயந்து சாவதை விட வீரப்புலிகளாகவே இருந்து விடுவது பெருமை என்று சொல்லிவிட்டுப் பரமசிவம் நடந்தார்.

நினைவுக் கட்டுரை

- சங்கர் -

# ஞாலத்தின் மாணப் பெரிது என்னும் அளவில் பங்காற்றியவர் அம்பலவாணர் குமாரவேலு!



"காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"

வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் போதிக்கும் விடயம் இது. உதவிகளைப் பொறுத்தே பெறுமதி மதிப்பிடப்படுகிறது.

அந்த வகையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஞானத்தில் மாணப் பெரிது எனும் அளவில் பங்களிப்பை வழங்கிய நாட்டுப் பற்றாளர் அம்பலவாணர் குமாரவேலு எம்மால் என்றும் நினைவு கூரப்படவேண்டியவர்.

இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் போராளிகளாக உள்ளனர். தமிழ்த் தேசிய இனமே போராட்டத்தின் பின்னால் உள்ளது. இந்தப் பிரமாண்டமான நிலையை அடைவதற்கு விடுதலைப் பயிருக்கு தண்ணீர் ஊற்றி வளர்த்தவர்களில் ஒருவர்தான் நாட்டுப் பற்றாளர் குமாரவேலு ஆசிரியர்.

1982 ஒக்ரோபர் 27 ஆம் திகதி நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலன்று- அயலவர் எவருக்குமே தெரியாமல் போராளிகளின் மறைவிடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த வீடு ஒன்றைக் கைவிடவேண்டிய நிலை எற்பட்டது. கொக்குவில் - பொற்பதி வீதியில் அமைந்திருந்த இந்த வீட்டை பல்கலைக்கழக மாணவர்கள் என்றபோர்வையில் தான் பெறமுடிந்தது. 25 இற்கும் குறைவான தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே இருந்த காலம் அது. எனவே போராளிகள் தம்மை இனங்காட்ட முடியாது. இந்த நிலையில் திட்டமிட்ட ஏற்பாடுகளில் திடீரென செய்யப்பட்ட மாற்றம் காரணமாக இந்த வீட்டில் இருந்தவர்கள் போராளிகள் தான் என வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அரை மணித்தியால இடைவெளிக்குள் அனைவரும் வெளியேற வேண்டி வந்தது. இந்த நிலையில் தான் ஏற்கனவே விடுதலை விரும்பியாக, இரகசியமாக இனங்காணப்பட்ட அவரின் உதவி நாடப்பட்டது.

உயிர் ஆபத்துக்கள் ஏற்படலாம் என்று தெரிந்த போதிலும், போராட்டத்தை நேசித்த காரணத்தால், இயக்க உறுப்பினர்களைக் காப்பாற்ற முன்வந்தார் அவர்.

விசுவமடுவிலே உள்ள தனது பண்ணையில் சில போராளிகளைத் தங்கவைத்துப் பாதுகாக்கத் துணிந்தார். அயல் கமக்காரர்களுக்கே தெரியாத முறையில் இதனைச் கச்சிதமாகச் செய்தார். இந்தக் கமத்தில் கூலி வேலை செய்யவந்தவர்களாகப் போராளிகள் உருமாற்றப்பட்டனர். அவர்களும் அப்பாத்திரத்தை கனகச்சிதமாக நடித்தனர். போராளிகளின் சகல தேவைகளையும் வெளியில் சென்று வரும் இவரே நிறைவேற்ற வேண்டியிருந்தது.

அடுத்தடுத்த பொய்களைக் கூறி, வேறு சில இடங்களை வாடகைக்குப் பெறும் வரை இவரது கமமே புலிகளுக்கு சரணாலயமாக இருந்தது.

1983 ஆம் ஆண்டு மார்ச் 04 ஆம் நாள் - உமையாள் புரத்தில் ஒரு கண்ணிவெடித்தாக்குதல் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலுக்கு முதல் நாள் இரவு பரந்தன் - குமரபுரத்திலுள்ள இவரது மற்றொரு இல்லத்தில் தங்கியிருந்து புறப்பட்டுச் சென்றே போராளிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர். இவரது வீட்டில் சாப்பிட்டுவிட்டே வானில் போராளிகள் புறப்பட்டனர்.

உமையாள்புரம் அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள பாலத்தில், காலையில் அதனைக் கடக்கும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனையிறவிலிருந்து பாண் வாங்கப் பரந்தனுக்கு வரும் இராணுவத்தினரே இலக்கு.

குண்டைப் புதைத்துவிட்டுக் காத்திருந்தனர் போராளிகள். ஒரு நூலை இழுத்தால் வெடிக்கும் விதமாக அப்பையா அண்ணை பொறிமுறை ஒன்றை அமைத்திருந்தார். படையினர் நெருங்கும் சமயத்தில் நூலை உயர்த்தினார் அப்பையா அண்ணை. அந்தநேரம் எங்கிருந்தோ வந்த ஆட்டுக்குட்டியொன்று இந்த நூலில் தடக்குப்படவே குண்டு முன்னரே வெடித்துவிட்டது.

இதனால் படையினர் குதித்து ஆனையிறவுப் பக்கமாக ஓடினர். இவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் போராளிகள். ஓடிச் செல்லும் படையினரை நோக்கித் தாக்குதல் நடத்த செல்லக்கிளியம்மான் படையினரின் றக்கின் சாரதியின் ஆசனத்தில் அமர்ந்தார். அச்சமயம் எதிர்பாராத விதமாக முல்லைத்தீவிலிருந்து கவசவாகனம் ஒன்று அந்த இடத்தை வந்தடைந்தது. இதனால் சண்டையின் போக்கே மாறியது. இச்சண்டையில் ஐந்து படையினர் காயமடைந்தனர். ஆனாலும் இந்த இடத்தை விட்டுப் போராளிகள் பின்வாங்க வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் தொலைத் தொடர்பு வசதிகள் இருக்கவில்லை. இதனால் போராளிகள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள முடியவில்லை. கிட்டு, செல்லக்கிளியம்மான், றஞ்சன் முதலான போராளிகள் ஒரு பகுதியாகவும், பொன்னம்மான், சந்தோசம், அப்பையா அண்ணை முதலான போராளிகள் இன்னொரு பகுதியாகவும், கணேஸும், இன்னொரு போராளியும் வேறொரு பகுதியாகவும் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு பகுதியாகச் சென்றடைந்தனர். எனினும் கவசவாகனத்துக்கு அண்மையிலேயே இவர்கள் சென்ற வான் நின்றதால், அதனை மீட்டெடுக்க முடியவில்லை.

பின்னர் அந்த வானிலிருந்த தடயங்களை வைத்து திருமலையைச் சேர்ந்த நவரட்ணராஜா, சிவானந்தராஜா ஆகியோரைக் கைது செய்தனர். இவர்களில் நவரட்ணராஜா யாழ்.தொழிநுட்பக்கல்லூரி மாணவன். இவர் குருநகர் முகாமில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு உயிரிழந்தார். சிவானந்தராஜா வெலிக்கடைச் சிறையில் படுகொலையானார்.

இதில் குறிப்பிடும் விடயம் என்னவெனில், வானில் இருந்த தடயத்தை வைத்து இருவரைக் கைது செய்து, கொலை செய்துள்ளனர் படையினர். இந்த நிலையில் இந்த வான் இவரது வீட்டிலிருந்து தான் புறப்பட்டு வந்தது என்ற தகவல் கிடைத்திருந்தால் நிச்சயம் இவரும் பலியாகியிருப்பார். இவ்வாறாக தனது உயிரைப் பணயம் வைத்து போராட்டப் பங்களிப்பை வழங்கியிருந்தார் இவர்.

1983 இனக்கலவரத்தையடுத்து, எழுந்த சூழலில் இவரது தொடர்புகள் மூலம் விசுவமடுவில் சில போராளிகளை இணைக்க முடிந்தது. 1984 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 05 ஆம் நாள் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையத் தாக்குதலின் பின்னர், இவரது தொடர்பு மூலம் கிடைத்த இடமொன்றிலேயே போராளிகள் தங்கமுடிந்தது. மேலும் தென் தமிழீழத்துக்கு துவிச்சக்கர வண்டிமூலம் பயணமாகும் சந்தோசம் முதலான போராளிகள் இவரது இடத்திலேயே தங்கி இளைப்பாறிவந்தனர். அவர்களுக்கு உண்வும், உறைவிடமும் வழங்கி ஆதரித்தார் இவர்.

இதன் பின்னர் ஆயுதப் பராமரிப்புக்கும், பாதுகாப்புப் பணிகளுக்கும், தளத்துக்கும் பொறுப்பாக இருந்த பண்டிதருடன் இவரது தொடர்பு இணைக்கப்பட்டதால், இயக்கத்தின் பாதுகாப்பு இரகசியம் கருதி ஏனையோரின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. எனினும் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் குடாநாடு வந்த பின்னர், மீண்டும் தனது பங்களிப்பை வழங்கினார்.

இவ்வாறாக தேசிய விடுதலையையே முதன்மைப்படுத்திய இவர் - பின்னர் விசுவமடுவில் ஏற்பட்ட சிறு விபத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திலேயே (கச்சேரி நல்லூர் வீதி) தங்க வேண்டியேற்பட்டது. பிறவியிலேயே இளம்பிள்ளை வாத நோய் தாக்கியதால், இவருக்கு ஒரு கால் ஊனமானது. ஆனால் அது உடல் அங்கத்தில் மட்டுமே, உள்ளதைப் பொறுத்தவரை ஊனம் இல்லை. அது உறுதியானது. எமது தலைவரின் காலத்தில் தமிழீழத்தைப் பெற்றுவிடவேண்டுமென்பதில் போராளிளுக்குள்ள அதே உறுதி இவரிடமிருந்தது.

இவர் தருமபுரம் மகாவித்தியாலயம், தருமபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஆகியவற்றில் கற்பித்துள்ளார். இறுதியாக புளியம்பொக்கணை பெரியபுலம் ஐயனார் வித்தியாலய அதிபராகப் பணியாற்றியுள்ளார். அமைதியாக, அடக்கமாக விடுதலைப் பணிபுரிந்த இவரது பணிகளைப் பாராட்டி, தமிழீழத் தேசியத் தலைவர் நாட்டுப்பற்றாளர் என்ற கௌரவத்தை இவருக்கு வழங்கியுள்ளார்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

உங்களுக்கு இதுவரை சப்தம கண்ட சனியாக இருந்த சனிபகவான் - தற்போது அஷ்டமஸ்தானத்துக்குப் பெயர்ச்சியாவது சிறப்பானது அல்ல. அதுவும் அவர் உங்கள் ராசிக்கு துவிதீய திரிதியாதிபதி ஆகவும் இருக்கிறார். இதனால் உடல் ஆரோக்கியம் பாதிப்படையும். சிறு சிறு மருத்துவச் செலவுகள் ஏற்படும். குடும்ப ஒற்றுமை சற்று ஆட்டம் காணும். அதோடு நிழல் கிரகமான ராகு சுகத்தில் அமர்ந்திருப்பது நலமான அமைப்பு அல்ல.

அதேநேரம் உங்கள் ராசியாதிபன் இந்த ஆண்டு செப்ரெம்பருக்குப் பிறகு அதிக பலன் பெறுவதால், எல்லாக் காரியங்களிலும் வெற்றி அடைவீர்கள். தங்களின் பொருளாதார நிலைமை சீராக இருக்கும். அஷ்டமத்துச் சனியால் கூடுதலான செலவு ஏற்படுமென்றாலும், அதைச் சமாளிக்கக் கூடிய ஆற்றல் உங்களுக்கு இருக்கும். ஆனாலும் சிக்கனத்தைக் கடைப் பிடித்து, வரவைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள்.

உத்தியோகத்தர்களுக்கு சனிப் பெயர்ச்சியால் அலுவலகப் பணிகளில் தொய்வானநிலை ஏற்படும். எனினும் குருபகவானின் அனுக்கிரகத்தால் எல்லாத் தடைகளும் விலகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகிய நன்மைகள் கிட்டும். உங்கள் மனதில் அஷ்டமத்துச் சனியால் ஏதோ ஒரு குறை நெருடிக் கொண்டே இருக்கும். இதனால் செய்யும் பணியில் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்தவும். மனதில் உள்ள எண்ணங்களை எல்லோரிடமும் வெளிப்படையாகக் கூற வேண்டும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராகவே நடக்கும். இதனால் லாபமும் சராசரியாக இருக்கும். இதனால் அதிக லாபத்தை எதிர்பார்த்துக் கனவு காணாதீர்கள். புதிய முதலீடுகள் செய்து வியாபாரத்தைப் பெருக்கும் எண்ணமிருந்தால், அதைத் தவிர்த்து விடுங்கள். கூட்டாளிகளிடம் கவனமாக இருக்கவும். அவர்களிடம் கலந்தாலோசித்த பிறகே பெரிய முடிவுகளை எடுக்கவும்.

வியாபாரத்தைப் பெரிய ஊர்களிலிருந்து மாற்றி, சிறிய ஊர்களில் செய்து, செலவினத்தைக் குறைக்கவும். புதிய சந்தைகளைத் தேடிப் பிடித்து வியாபாரம் செய்யவும். ஆகமொத்தம் கடின உழைப்பு, சிறிய லாபம் என்ற வகையில் இந்தக் காலகட்டத்தைத் தாங்கள் கடக்க நேரிடும்.

விவசாயிகள் இந்தச் சனிப் பெயர்ச்சியில் கவனமாக இருக்கவும். சனீஸ்வரர் உங்களைப் பல வழிகளிலும் அலைக்கலாம்.

## தனுசு

ஆனாலும் அதற்கு அஞ்சாமல் நடைமுறை சாத்தியக் கூறுகளை உணர்ந்து செயற்படவும். அதே நேரம் இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு விளைச்சல் மற்றும் பண்டமாற்று மூலமாக உங்கள் வருமானம் அதிகரிக்கும். மற்றைய படி கால்நடைகளால் தங்களுக்குச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அவற்றைப் பராமரிப்பதில் கவனமாக இருக்கவும். அரசியல் வாதிகளுக்கு இந்தப் பெயர்ச்சியில் சில சங்கடங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. உங்கள்மீது களங்கம் கற்பிக்க சிலர் முயற்சி செய்வார்கள். ஆனால் அந்தச் சூழ்ச்சியை உங்கள் புத்திசாதுரியத்தனத்தால் அறிந்து, யுக்தியுடன் முறியடிப்பீர்கள். குருபக வானின் சஞ்சாரத்தால் எதையும் சமாளிக்கும் திறமையை நீங்கள் பெறுவீர்கள்.

கலைத்துறையினருக்கு அதிக முயற்சிக்குப் பிறகு புதிய ஒப்பந்தங்கள் கைகூடும். எனினும் ஆவலுடன் எதிர்பார்த்த புகழ், பாராட்டு போன்றவை கிடைப்பதில் காலதாமதம் ஏற்படலாம். சில கலைஞர்கள் செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு வெளிநாட்டுக்குப் பயணம் செய்யும் வாய்ப்பைப் பெறுவீர்கள். மற்றைய படி ரசிகர்களின் ஆதரவு கிடைக்கும். குறிப்பாக - நடனக் கலைஞர்களுக்கு இந்தச் சனிப் பெயர்ச்சி வெற்றிகரமாகவே அமையும். பெண்களுக்கு சனிப் பெயர்ச்சிக் காலமான இந்த இரண்டரை ஆண்டுகளும் மகிழ்ச்சியாகவே கழியும். குடும்பத்தில் சந்தோஷம் தாண்டவமாடும். குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். அதேநேரம் சில சமயங்களில் உடல் உபாதைகள் ஏற்படலாம். அடுத்தவர் நம்மைப் புரிந்து கொள்ளவில்லையே என்று கவலைப்படாமல், நீங்கள் அவர்களை அனுசரித்து நடக்கவும்.

மாணவமணிகள் தகாத நடத்தையுள்ளவர்களின் நட்பைத் தவிர்த்து, படிப்பில் கவனம் செலுத்தவும். கல்வியில் முயற்சிக்கு ஏற்ப மதிப்பெண்கள் கிடைக்காமல் போகலாம். அதனால் முயற்சிகளைச் சற்று அதிகப்படுத்துங்கள். பெற்றோர்களின் கருத்துப்படி நடக்கவும்.

பரிகாரம் - உங்களுக்கு இது அஷ்டமத்துச் சனியின் காலமாக இருக்கிறது. அதனால் பிரதி சனிக்கிழமைகளில் சனீஸ்வர பகவானைத் தரிசிக்கவும். தினமும் காக்கைக்கு அன்னமிட்டு வரவும். முடிந்தால் சனிப் பெயர்ச்சி நாளில் சனிபகவானைத் தரிசித்து அர்ச்சனை செய்யவும்.

### ஜின்னாவை பாராட்டிய விவகாரம்

# பாரதீய ஜனதா தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் எல்.கே.அத்வானி



புதுடெல்கி

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி அந்தப்பதவியிலிருந்து விலகும் கடிதத்தை கட்சியின் செயலாளரிடம் கையளித்துள்ளார்.

பாரதீய ஜனதாக்கட்சியின் அகில இந்தியத் தலைவரும் முன்னாள் இந்தியத் துணைப் பிரதமருமான அத்வானி பாகிஸ்தானுக்கு ஒரு வாரகால சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அப்போது பாகிஸ்தான் பிரிவினைக்கு காரணமான முகமது அலிஜின்னா நினைவிடத்தில் மலர்க்கோர்வை வைத்து அஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் ஜின்னா பற்றி அத்வானி கூறும்போது - அவர் மிகவும் நல்லவர். மதச்சார்பற்றவர் என்று கருத்துத் தெரிவித்தார். இதற்கு ஆர்.எஸ்.எஸ் விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் பஜ்ரங்க தாள் அமைப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஆர்.எஸ்.எஸ் உயர் மட்டத்தலைவர்கள் அவசரமாகக் கூடி விவாதம் நடத்தினார்கள். அப்போது அத்வானி சர்ச்சைக்குரிய கருத்தை வாபஸ் பெறவேண்டும் இல்லையெனில் அவரது பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பாகிஸ்தான் சுற்றுப்பயணம் முடிந்து டெல்கி திரும்பிய அத்வானியிடம் இது குறித்து கேட்கப்பட்டது. அப்போது ஜின்னா குறித்து தான் தெரிவித்த கருத்தை வாபஸ் பெற முடியாதென்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார் அத்வானி. அதனால் ஆத்திரமடைந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் முக்கிய நகரங்களில் அத்வானிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மற்றும் கொடும்பாவிஎரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்படிப்பட்ட பரபரப்பான சூழ்நிலையில் பாரதீய ஜனதா பொதுச்செயலாளர் சஞ்யய்ஜோஷியின் வீட்டிற்கு நேரில் சென்ற அத்வானி அவரிடம் ராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்தார்.

இந்தக் கடிதத்தை கராச்சியிலிருந்து டெல்கி புறப்படுவதற்கு சற்று முன்பு எழுதியதாக அத்வானி குறிப்பிட்டார். இந்தக் கடிதம் உடனடியாக பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது -

பாரதீய ஜனதாக் கட்சி தலைவர் பதவியிலிருந்து விலக நான்முடிவு செய்துள்ளேன். இதைக் கட்சி ஏற்று தலைவர் பதவியிலிருந்து விடுவிக்கவேண்டும். என்னுடைய கோரிக்கையை ஏற்று இதுவரை கட்சிக்கு நான் செய்த பணிகளின் அடிப்படையில் எனது ராஜினாமாவுக்கு கட்சி அனுமதி அளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த முடிவை நன்கு யோசித்து மிகவும் கவனமாக எடுத்திருக்கிறேன். கடந்த வாரம் நான் மேற்கொண்ட பாகிஸ்தான் சுற்றுப்பயணம் இரு நாடுகளுக்கிடையே சுமூகஉறவு ஏற்பட தேசிய ஜனநாயகக் கூட்டணி எடுத்த நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக நம்புகிறேன்.

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின்போது நான் ஏதும் சொல்லவில்லை. அங்கு எதையும் செய்யவில்லை. எனவே எதையும் திரும்பப் பெறவோ அல்லது மறு ஆய்வு செய்யவேண்டிய அவசியமோ இல்லையென்று கருதுகின்றேன்.

இவ்வாறு கடிதத்தில் அத்வானி குறிப்பிட்டுள்ளார். அத்வானி ராஜினாமா செய்த விவகாரத்தை அறிந்ததும் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்கள் அதிர்ச்சியடைந்தனர். மூத்த தலைவர்கள் பிரமோத் மகாஜன், ராஜ்நாத்சிங், சுஷ்மா சுவராஜ், அனந்தகுமார் பால்அப்தே, ஆகியோர் உடனடியாக அத்வானி வீட்டுக்கு விரைந்து சென்றனர். அவர்கள் ராஜினாமா முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அத்வானியிடம் வலியுறுத்தினார்கள்.

ஆனால், ஜின்னா பற்றிய அத்வானியின் கருத்துக்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆதரவு தெரிவித்திருக்கிறார். இமாச்சலப் பிரதேச மாநிலம் மனாலியில் நிருபர்களுக்குப் பேட்டியளித்த வாஜ்பாய் -

முகமது அலி ஜின்னா பற்றி அத்வானி கூறிய கருத்துக்களை சிலர் தவறாகப் புரிந்துகொண்டனர்.

ஜின்னாவை தேசத்தந்தையாக பாகிஸ்தான் மக்கள் போற்றுகிறார்கள். இந்தியா - பாகிஸ்தான் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழவேண்டும் என்றே விரும்பினார். ஆனால், அவரது எண்ணத்துக்கு பாகிஸ்தானின் மற்றத் தலைவர்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற சரோஜினி நாயுடு கூட ஜின்னா பற்றி இதேபோன்ற கருத்துக்களைக் கூறியிருக்கிறார். எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்க யாருக்கும் உரிமை உள்ளது எனத் தெரிவித்தார்.

அத்வானியின் ராஜினாமாவுக்கு விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் பிரவின்தொகாடியா கூறியதாவது -

அத்வானிஒரு ராஜதுரோகி. அவரது ராஜினாமா முக்கியமானதொன்று. ராமர் கோவில் கட்டுவதற்காக ராமரத யத்திரை நடத்திய அத்வானி, பாகிஸ்தானில் தெரிவித்த கருத்துமூலம் அவரது உண்மையான நிறம் தெரிந்துவிட்டது.பாரதீய ஜனதா தலைவர் பதவிக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவரை தேர்வு செய்திருக்கக் கூடாது.

10லட்சம் இந்துக்கள் சாவுக்குக் காரணமான முகமது அலி ஜின்னாவுக்கு அத்வானி புகழ்மாலை சூட்டியதை மறக்கவும் முடியாது. மன்னிக்கவும் முடியாது. இது தேசத்தின் மீது அவருக்கு மதிப்பில்லை என்பதைக் காட்டுகிறது.

தன்னுடைய கருத்தையும் ஜின்னாவின் நினைவிடத்தில் வைத்துத்தான் அத்வானி தெரிவித்தார். இந்தியாவில் வைத்து புகழ்ந்து கூறவில்லை என்பதை அனைவரும் கவனிக்க வேண்டும். அத்வானிக்குப் பிறகு புதிய தலைவரை தேர்வு செய்வது பாரதீயஜனதாக் கட்சியின் தனிப்பட்ட உரிமை. இருப்பினும் பாரதீய ஜனதா மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் தலைவராக உண்மையான இந்தியரைத் தேர்வு செய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

## சைக்கிள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்

மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தில் அநாதரவான நிலையிலிருந்த சைக்கிள் ஒன்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ஒருவரால் மீட்கப்பட்டு, யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்காக பல்கலைக்கழக மாணவனுக்கு நன்றி தெரிவித்த அரசியற்துறையினர், சைக்கிளைத் தவறவிட்டவர் பொற்பதி வீதியில் அமைந்துள்ள அரசியற்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர்.

## புயலின் நிறங்கள் ஓவியக் கண்காட்சி யாழ்.பல்கலையில் சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம்

தமிழக ஓவியர் புகழேந்தியின் புயலின் நிறங்கள் ஓவியக் கண்காட்சியும் கருத்துப் பகிர்வும் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை துணை இணைப்பாளர் குகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரை ஓவியர் புகழேந்தி, கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன், ஓவியர் இராசையா ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைக்க, மங்கள விளக்கை பேராசிரியர் சண்முகலிங்கம், வணிகமுகாமைத்துவ பீடாதிபதி தேவராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நூலகத்தில் வைக்கப்பட்ட ஓவியக் காட்சியறையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். ஓவியக் கண்காட்சியில் பல நூற்றுக் கணக்கான மாணவர்கள், பொதுமக்கள், கல்விமான்கள் எனப் பலர் பார்வையிட்டனர்.

## யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நேற்றைய தொடர்ச்சி வருமாறு -

**பாவோதல்**

*1 ஆம் இடம் - தே.விதுர்ஷன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), 2ஆம் இடம் - ந.நிசாந்தன் (கோப்பாய் மகாவித்தியாலயம்), 3ஆம் இடம் - சு.சோபனா (வேம்படி மகளிர் கல்லூரி).*

**பாவோதல்**

*1 ஆம் இடம் - ம.கனியா (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - தே.கோமதி (முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம் - சி.அகிலா (புத் தூர் சோமஸ்கந்தா).*

**பாவோதல்**

*1 ஆம் இடம் - கு.சிவானுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - சி.யாழினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - பா.சுகிர்தா (அத்தியார் இந்துக் கல்லூரி).*

**இசையும் அசைவும்**

*1 ஆம் இடம் - ச.தர்சிகா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம் - அ.தனுஜா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), 3 ஆம் இடம் - கி.அபிரா (யாழ்.மத்திய கல்லூரி).*

**இசை (தனி)**

*1 ஆம் இடம் - க.மயூரதி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - கு.ஸ்ரீஜெயனி (உரும்பிராய் சைவத்தமிழ்), 3 ஆம் இடம் - இ.விஷாலினி (வண்.நாவலர் மகாவித்தியாலயம்).*

**இசை (தனி)**

*1 ஆம் இடம் - ர.அர்ஜுன் (யாழ்.இந்துக்கல்லூரி), 2 ஆம் இடம் - பா.அங்குசன் (ஆவரங்கால் நடராஜராமலிங்), 3 ஆம் இடம் - ஆ.டுன்சிகா (திருக்குடும்ப கன்னியர்மடம்).*

**இசை (தனி)**

*1 ஆம் இடம் - ர.சுரசாகித்தியன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), 2 ஆம் இடம் - தெ.பவனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - செ.உஷாந்தி (கோண்டாவில் இ.ம.வி).*

**இசை (தனி)**

*1 ஆம் இடம் - சி.மு.ஜெனகன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), 2 ஆம் இடம் - யோ.மாதவன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), 3 ஆம் இடம் - எஸ்.தாரணி (இந்து மகளிர் கல்லூரி).*

**இசை (குழு)**

*1 ஆம் இடம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, 2 ஆம் இடம் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் - யாழ்.மத்திய கல்லூரி.*

(தொடரும்..)



கொழும்பு கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் முன்பாக இனந்தெரியாதோரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் உயிரிழந்த குருநகரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கு அஞ்சலி தெரிவித்து குருநகர் பகுதியில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு சோககீதம், இசைக்கப் படுவதுடன், அரைக்கம்பத்தில் கொடிகள் பறக்க விடப்பட்டு கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. இரு இளைஞர்களின் சடலங்களும் நேற்றுக்காலை முதல் அவர்களது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அஞ்சலி செலுத்திய வண்ணம் உள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கட்டடப் பொருட்களுக்குத் தடை; மட்டக்களப்பு சந்திப்பில் ஆராய்வு

மட்டக்களப்பு—

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கட்டுமானப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு படையினர் தடை விதித்துள்ளமை குறித்து கண்காணிப்புக்குழுவினர், இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளுக்கிடையில் மட்டக்களப்பில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு அரச செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் குறிப்பாக சீமெந்து எடுத்துச்செல்வது பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது.

இதன்போது போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு சில பாவனைப் பொருட்கள் எடுத்துச்செல்ல கட்டுப்பாடுகள் விதித்திருப்பதாக இராணுவ தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

ஒருவர் தனது பாவனைக்கு 25 பைக்கற் சீமெந்து எடுத்துச்செல்லலாம் என்றும் இந்த தொகைக்கு மேலாக கொண்டுசெல்ல வேண்டுமானால் அதற்கான அனுமதியை பிரதேச செயலரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று அரசாங்க அதிபர் வே.சண்முகம் தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு சீமெந்து, இரும்பு போன்ற பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கவேண்டும் என்று அண்மையில் பொதுமக்களால் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பினர்...

டும் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த எதிர்ப்பினை கவனத்திலெடுக்காது சபை நடவடிக்கைகளை தொடர பிரதிச் சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தன முயன்றதையடுத்து, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், பிரதியமைச்சரின் மேசையை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்த செயற்பாட்டுக்கு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய எதிர்ப்புத் தெரிவித்தார். கூட்டமைப்பினரின் எதிர்ப்பை அடுத்து பகல் 11.20 மணியளவில் சபை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா -

நேற்றுமாலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இன்று பொறுப்பு வாய்ந்த அமைச்சரொருவர் அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

இன்று வழங்கப்பட்டுள்ள பதில் நல்லவிதமாக அமையாவிடில் நாடாளுமன்ற அமர்வுகளில் கூட்டமைப்பின் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடருமெனவும் தெரிவித்தார்.

திருகோணமலை நகரில் மேலதிகமாக இராணுவம் குவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக இன்று நாடாளுமன்றில் விசேட உரை நிகழ்த்தப்படுமென ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (தே)

# ஹெல்கிசன்...

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் வான் விங்கெல் கூறுகையில் -

இராணுவ ஆக்கிரமிப்பு பகுதியில் பயணிக்கும் தமிழீழ விடுதலைப் போராளிகளின் போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் எமக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அதைத் தொடர்ந்தே இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

அது குறித்து தமிழ்ச்செல்வன் தெரிவித்த விடயங்களையும் வருத்தத்தையும் அரசுத் தரப்பிடம் விரைவில் எடுத்து விளக்கவுள்ளோம்.

அரசாங்கம் ஏன் இத்தகைய நிலைப்பாட்டை மேற்கொண்டது என்பது குறித்து அரசிடம்தான் கேட்கவேண்டும்.

அதிகரித்துவரும் ஆட்கொலைச் சம்பவங்கள் குறித்து கவலை கொள்கிறோம். இலங்கையின் பாதுகாப்பு நிலைமை குறித்த எமது கவலையை அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் எடுத்துக்கூறியிருக்கிறோம்.

அரசுப் பகுதிகளில் நடைபெறும் ஆட்கொலைச் சம்பவங்களுக்கு அரசதரப்பே பொறுப்பேற்கவேண்டும். நாங்கள் பொலிஸார் அல்ல. நாங்கள் பாதுகாப்பு அளிக்க முடியாது. அரசுப் பகுதியில் உள்ள மக்களுக்கு அரசுதான் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

நாங்கள் சூழ்நிலையைக் கண்காணிக்கவே வந்துள்ளோம். எம்மிடம் வரும் முறைப்பாடுகளுக்கு உரிய விசாரணைகள் நடத்தி தீர்வுகாணும் பணியையே நாம் செய்துவருகிறோம் எனத் தெரிவித்தார்.

# 14 ஆம் திகதி...

யங்களையும் நிறைவு செய்துள்ளதாகவும் வெளிப்படையாக அன்றி, உள்ளார்ந்த அடிப்படையில் அது குறித்த நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(01)

# ஊடகத்துறை...

ரூபவாஹினியில் ஜே.வி.பியினரைத் தாக்கி வழங்கிய பேட்டி ஜனாதிபதியின் கடந்த இந்திய விஜயத்தின் போது மங்களவை அழைத்துச் செல்லாதமை போன்றவை மங்களவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முறுகலை எடுத்துக் காட்டியிருந்தன.

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் மங்கள ஜனாதிபதிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதுடன், ஜனாதிபதிக்கு எதிராக அமைச்சர்கள் அணியொன்று மங்கள தலைமையில் திரள்கிறது என்றும் கடந்தவாரம் தென்னிலங்கையில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாத்தறை தொகுதி எம்.பியாக அரசியலில் புகுந்த அமைச்சர் மங்கள - ஒரு காலத்தில் எஸ்.பி.திஸநாயக்க இருந்ததுபோல - ஜனாதிபதியின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவராகவும் இருந்துவந்தவர் ஆவார்.

# கருணாவின் சதி முறியடிப்பு சமரில் ஆறு போராளிகள் வீரச்சாவு!

11.04.2004 அன்று கருணாவின் சதி முறியடிப்பு சமரில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

வீரவேங்கை வான் முகிலன் (கேதாரம் சிவகுமார்) துரத்தியமேடு - துறைநீலாவணை, மட்டக்களப்பு.

வீரவேங்கை நேசன் (பூபாலபிள்ளை அசந்தன்) கொத்தியாப்புனை, கன்னங்குடா.

வீரவேங்கை இளையராஜ் (செல்லத்தம்பி இராமேஸ்வரன்) கரடியனாறு கொலனி, மட்டக்களப்பு.

வீரவேங்கை செஞ்சுடர் (வேலாயுதம் சசிகுமார்) விஷ்ணு ஆலய வீதி, கிரான், மட்டக்களப்பு.

வீரவேங்கை அனலேந்தி (நடேசலிங்கம் ஜெயசீலன்) மகிழவெட்டுவான், ஆயித்தியமலை.

வீரவேங்கை பரமஜீவன் (முருகுப்பிள்ளை குலேந்திரன்) கடற்கரை வீதி, புதுக்குடியிருப்பு, இல 4, ஆரையம்பதி, மட்டக்களப்பு ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

# ஹெல உறுமய...

வின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அத்துரலிய ரத்னதேரர், நாடளுமன்றத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் விசேட அறிவித்தலொன்றை விடுத்தார். அதில் அவர் -

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றின் அமர்வுகளை தற்காலிகமாக பகிஷ்கரிப்பதெனத் தீர்மானித்துள்ளோம்.

சுனாமி நிவாரண சபை அல்லது பொதுக்கட்மைப்பு ஏற்படுத்தப்படும் முடிவுக்கு எதிராகவே இந்த பகிஷ்கரிப்பு இடம்பெறவுள்ளது. அத்துடன் ஜனாதிபதிக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே எவ்வித இரகசிய உடன்பாடும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஏற்படுத்தப்படக்கூடாது.

பொதுக்கட்மைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு எதிராகவும் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராகவும் எமது கட்சி வன்செயல்களற்ற எதிர்ப்பு போராட்டத்தினை நடத்தவுள்ளது.

அத்துடன் பயங்கரவாதிகளுக்கு இந்த நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தை நிர்வகிப்பதற்கு எவரும் அதிகாரத்தினை அளிக்கக் கூடாது. அவ்வாறு இந்தக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் அது ஒரு குற்றச்செயலாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பணிகளை வழங்கவென ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் மூன்று செயற்திட்டங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு நாடாளுமன்ற அனுமதியும் கிடைத்துள்ளது. எனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு புதிதாக ஒரு கட்டமைப்பு உருவாக்க வேண்டிய தேவையில்லை.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி தலதா மாளிகையின் முன் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

மற்றைய பிக்குகளும் இந்த உண்ணாவிரதத்தில் பங்குகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உண்ணாவிரத நடவடிக்கையானது சாகும்வரையிலான உண்ணாவிரதமாகவும் மாறக் கூடுமெனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின் மீதான பயணத்தடை...

பிரட்ஸ்கர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் வொகன் விங்கிள் ஆகியோரைச் சந்தித்துப் பேசியபோதே - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் இதுகுறித்து எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தச் சந்திப்பில் முக்கியமாக மூன்று விடயங்கள் குறித்துப் பேசப்பட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கை சம்பந்தமாகவும், பொதுக்கட்டமைப்பு இழுத்தடிப்புத் தொடர்பாகவும், புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகவும் பேசினோம்.

அண்மைக்காலமாக இடம்பெறும் கொலைகள் தொடர்பாகவும், அதன் பாரதூரமான விளைவுகள் தொடர்பாகவும் எமது கரிசனைகளை - ஆதங்கங்களை - நிலைப்பாடுகளை கண்காணிப்பாளர்கள் என்ற வகையிலும் அனுசரணையாளர் என்ற வகையிலும் அவர்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கடந்த மூன்று வருடங்களாகப் பேணப்பட்டு வருகின்றபோதும், அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் - முழு அளவில்,சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

ஆனால், அண்மைக் காலத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் முக்கியமாக எமது போராளிகளின் நடமாட்டம், போக்குவரத்து, தளபதிகள் - பொறுப்பாளர்களுக்கான பயண ஏற்பாடுகள் போன்றவற்றில ஏற்படுத்தப்படும் தாதமங்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

இவ்வாறான செயல் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதென்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றோம். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் எமது தளபதிகள், பொறுப்பாளர்கள் இங்கே வந்து ஒரு வாரமோ, இரு வாரமோ கழிந்த பின்னர் மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டியவர்கள். ஆனால், அவர்களின் பயணங்கள் தாமதமாகிக் கொண்டிருக்கிறது.

அவர்கள் எமது தலைவரின் அழைப்பின் பேரில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை வந்து எமது தலைமைப்பீடத்தின் ஆலோசனைகள், கருத்துக்கள், ஒழுங்குபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை இருப்பதால் அவர்களின் போக்குவரத்து மிக மிக அத்தியாவசியமானது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அனுசரணையுடன் இவர்களின் போக்குவரத்துக்கள் சீராக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது நெருக்கடி நிலைமைகளின் உச்சக்கட்டமாக எமது பொறுப்பாளர்களதும், தளபதிகளதும் போக்குவரத்துக்கள் தாமதமடைகிறது.

இந்த நிலைமை உடனடியாக சீர் செய்யப்படவேண்டும். இந்த விடயம் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கப்படுமானால் யுத்தநிறுத்த சூழல் முழு அளவில் கேள்விக்குரியதாக மாறிவிடும் - ஆபத்து நிலையொன்று தோன்றும் என நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பாக மிகவும் விரைவாக தீர்க்கமான பதிலைத் தருமாறு நாங்கள் கண்காணிப்புக்குழுத் தலைமையிடம் கேட்டிருக்கின்றோம். இல்லாதுபோனால் கடந்த காலங்களைப் போலவே சுயமான எமது பாதுகாப்பு ஏற்பாடுகளுடனான போக்குவரத்துக்களை நாங்கள் ஒழுங்குபடுத்த வேண்டிவரும்.

எமது கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் துணையுடன் - எமது சுயபாதுகாப்புடன் போக்குவரத்தை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். இந்தநிலை தவிர்க்க முடியாத, இக்கட்டான நிலைமையை எங்களுக்கு ஏற்படுத்தும். அப்படியான சூழ்நிலை - யுத்தநிறுத்தத்தை தொடர்ந்தும் தக்கவைப்பதற்கு சாதகமான சூழ்நிலையை தொடர்ந்தும் பேணக்கூடியதாக இருக்குமோ என்ற கேள்விக்குறி ஒன்று இருக்கிறது.

இலங்கை அரசாங்கமோ - சம்பந்தப்பட்டோரோ இந்தயுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாகப் பேணுவதற்கு விரும்பமில்லாதிருந்தால் அதையும் தெரிவிக்கவேண்டும் - முன்வைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் இராணுவத்தரப்பு - ஆயுதக் குழுக்களை வைத்துக்கொண்டு அச்சுறுத்தல்கள், கொலைகள் என்பவற்றை அண்மைக்காலமாக தீவிரப்படுத்தியிருக்கின்றது.

இதன் விளைவுதான் பொறுப்பாளர்கள், தளபதிகளின் போக்குவரத்து மீது நெருக்கடித் தன்மை ஒன்றைத் தோற்றுவித்து புலிகளைச் சீண்டுவதும், புலிகள் மீதான வெறுப்புணர்வைக் காட்டும் செயற்பாட்டை மேற்கொண்டு வருவதுமாகும். இது எங்களுக்கு மட்டுமல்ல அண்மைக்காலமாக தமிழீழத்தின் மாவட்டங்கள் தோறுமே பெரும் நெருக்கடிநிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்ட பின்னர் பல மாவட்டங்களில் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் படுகொலை செய்யப்படுவது தொடர்ந்தவண்ணமுள்ளன. இதனை நோர்வே அனுசரணையாளர்களுக்கு சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

கிழக்கில் நடைபெற்ற படுகொலைகளை இலங்கை தீவு முழுவதற்கும் பரவலாக்கியிருக்கின்றனர் எனத்தான் நான் கருதுகிறேன். ஆகவே, இராணுவ புலனாய்வு அமைப்பின் செயற்பாடுகள் அனைத்தும் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படவேண்டும். ஆயுதக் குழுக்களைச் செயலிழக்கச் செய்ய வேண்டும். இதன்மூலமே இந்தப் படுகொலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

இதனை ஆதாரபூர்வமான தகவல்களுடன் - அதன் உண்மைத் தன்மையை அனுசரணையாளர்கள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

பொதுக்கட்டமைப்பை மேலும் மேலும் இழுத்தடித்து சிக்கலாக்கும் நிலைமையையே ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அனுசரணையாளர்கள் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாடு எதுவும் இன்று எமக்குக் கிடைக்கவில்லை.

தரைப்படை, விமானப்படை, கடற்படை என்ற எல்லாக் கட்டுமானங்களும் விடுதலைப் புலிகளால் கட்டியெழுப்பப்பட்டிருப்பதொன்றும் இன்று புதினமான விடயமல்ல. அரசாங்கம் தன்மீதான சர்வதேச அழுத்தத்தைத் திசைதிருப்பவே இவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்கிறது. இதனை விட்டுவிட்டு அரசாங்கம் செய்யவேண்டிய செயற்பாட்டை மேற்கொள்ள தமது அழுத்தத்தை சர்வதேச சமூகம் பிரயோகிக்க வேண்டும்.

வன்னியிலும் திருகோணமலையிலும் விமான நிலையம் இருப்பது தொடர்பாக இந்திய அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளது. இதற்கமைய இலங்கை அரசுக்கு வான்வழியில் பாதுகாப்புத் தருவதாக வெளியான செய்தியில் எவ்வளவு உண்மைத் தன்மை இருக்கிறதென எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், இந்த விடயத்தில் இந்தியா கவலைகொள்ள வேண்டிய தேவையில்லை. அவர்களுக்கும் எமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறோம்.

எமது படைக் கட்டுமானங்கள் எதுவும் அயல்நாடுகளை அச்சுறுத்துவதற்காகக் கட்டியெழுப்பப்படவில்லை. எமது மக்களின் பாதுகாப்புக்காகவே இதனைச் செய்கிறோம். இலங்கை விமானப்படை, கடற்படையின் குண்டுவீச்சுக்களாலேயே பெருமளவு மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். எமது மக்களின் சுயபாதுகாப்புக்காக கட்டியெழுப்பப்பட்டுள்ள படைக்கட்டுமானங்கள் தொடர்பாக யாரும் கரிசனை கொள்ளவோ, கவலை கொள்ளவோ தேவையில்லை. இந்தத் தவறை இந்திய அரசு விடாது என நான் நினைக்கிறேன்.

இலங்கை விமானப்படைக்கு இந்திய அரசு உதவுமேயானால் கடந்த காலங்களில் இலங்கை விமானப் படையால் கொல்லப்பட்ட எமது மக்களை கொல்வதற்கான நியாயத்தை தேடிக்கொடுப்பதாகவே அது அமையும்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொழும்பில் கொல்லப்படுவதாகக் கூறப்படும் விடயம் எனக்கு புதிதாகவே இருக்கிறது. தற்போது கொழும்பில் ஆயுதக்குழுவின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக மக்கள் பேசிக்கொள்கின்றனர். தற்போது நடைபெற்ற கொலைகள் கூட அங்குள்ள ஆயுதக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டால் நடைபெற்றதே தவிர இந்த விடயத்துடன் விடுதலைப் புலிகள் எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லை.

அவ்வாறு புலிகளை சம்பந்தப்படுத்துவோர் சமாதான சூழ்நிலையை சீர்குலைக்கும் நோக்குடன் செயற்படுகின்றனர்.

தமிழ்மக்கள் இன்று பொறுமை இழந்துள்ளனர். அவர்கள் பொறுமை இழக்கும்போது - அவர்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் புலிகள் சில தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

ஆசிரியர்:
திரு.ய.ஜெயசீலன்
B.sc (Hons) Dip.in Ed. (Distinction)
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

# பௌதிகவியல்


மூன்று மணித்தியாலம்
Three hours

1. பின்வருவனவற்றுள் ஈர்ப்பு அழுத்தத்தின் பரிமாணத்தை வகைகுறிக்கும் கோவை

1) $L^2T^{-2}$ 2) $L^2T^{-3}$ 3) $LT^{-2}$ 4) $L^2T^2$ 5) $L^{-1}T^{-3}$

2. பின்வருவனவற்றுள் மின்காந்த அலைகள் பற்றிய தவறான கூற்று
1. அவை தெறிப்படையும் 2. அவை முறிவடையும்
3. அவை கோணலடையும்
4. மீடிறனுடன் தொடர்பான சில குறிப்பியல்புகளையும்அவை கொண்டிருக்கும்
5. அவை நெட்டாங்கு அலைகளாகும்.


3. நிலத்திலுள்ள ஒரு புள்ளி O விலிருந்து புவியீர்ப்பின் கீழ் எறியப்பட்ட P, Q என்னும் இரு துணிக்கைகளின் பாதைகள் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.




A) Q வின் வேகத்தின் நிலைக்குத்து கூறு Pயின் வேகத்தின் நிலைக்குத்துக் கூறிலும் பெரிதாகும்.
B) Pயும் Qவும் சமமான பறப்பு நேரங்களைக் கொண்டன.
C) Pயின் வேகத்தின் கிடைக்கூறு Qவின் வேகத்தின் கிடைக்கூறிலும் பெரிதாகும்
இவற்றுள் சரியானவை.

1) A மட்டும் 2) B மட்டும் 3) Aயும் Cயும்
4) Aயும் Bயும் 5) A, B, C மூன்று.

4. சீரான தடிப்பும், அடர்த்தியுமுடைய உருளை வடிவப் பாத்திரம் ஒன்றில் h உயரத்துக்கு திரவம் ஊற்றப்பட்டுள்ளது. இத்தொகுதியின் புவியீர்ப்பு மையம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது.




1. புவியீர்ப்பு மையத்தின் நிலை h இல் தங்கியிருக்கும்
2. புவியீர்ப்பு மையத்தின் நிலை திரவ அடர்த்தியில் தங்கியிருக்கும்
3. h அதிகரிக்கும்போது புவியீர்ப்பு மையம் மேல்நோக்கி உயரும்.
4. திரவம் இல்லாதபோது புவியீர்ப்பு மையம் அச்சின் நடுப்புள்ளியில் இருக்கும்.
5. திரவம் நிரப்பியுள்ளபோது புவியீர்ப்பு மையம் அச்சின் நடுப்புள்ளியில் இருக்கும்.

5) எளிமை இசை இயக்கத்தை ஆற்றும் துணிக்கை ஒன்றில் எந்த இரு கணியங்கள் ஒரேமாதிரியாக (ஒரே அவத்தையில்) நேரத்துடன் மாறுகின்றன.
1. இடப்பெயர்ச்சி, வேகம் 2. வேகம், ஆர்முடுகல்
3. இடப்பெயர்ச்சி, ஆர்முடுகல் 4. விசை, ஆர்முடுகல் 5. விசை, வேகம்.


6) அரியத்தில் ஒளிமுறிவு பற்றிச் செய்யப்பட்ட பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A) அரியத்தில் எல்லாப் படுகதிர்களும் எதிர்முகத்தினூடாக முறிவடைந்து வெளியேறும்.
B) ஒளிக்கதிரில் வெளிப்படுகோணம் படுகோணத்துடன்
C) இழிவுவிலகல் கோணமானது அரியம் வைக்கப்பட்ட ஊடகத்தினுள் தங்கியிருக்கும்.

1. A,B,C மூன்றும் சரியானவை. 2. A மட்டும் சரியானது.
3. B மட்டும் சரியானது. 4. C மட்டும் சரியானது.
5. Aயும் Cயும் சரியானவை.

7) 60W மின்குமிழ் சரியான துலக்கத்துடன் 3 மணித்தியாலம் ஒளிருமாயின் செலவிடப்பட்ட சக்தி KWh இல்
1. 0.18 Kwh 2. 1.8 Kwh 3. 18 Kwh 4. 0.018 Kwh 5. 0.36 Kwh

8) 6 Ω மின்தடையை உடைய ஒரு மின்விளக்கானது 12 V மி.இ.வியும் புறக்கணிக்கத்தக்க அகத்தடையும் உடைய மின்முதல் ஒன்றுடன் 4 Ω மொத்தத் தடையையுடைய தடைக் கம்பிகளால் இணைக்கப்பட்டது. மின்விளக்கு நுகரும் வலு
1. 8.64 W 2. 24 W 3. 7.56 W 4. 4.8 W 5. 7.2 W

9) சமதிணிவை உடைய ஓய்விலுள்ள A,B ஆகிய இரு துணிக்கைகளில் நேரம் tயுடன் விசை f மாறுவதைக் காட்டும் வரைபுகள் காட்டப்பட்டுள்ளன. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.





A) இரு துணிக்கைகளிலும் ஏற்பட்ட உந்தமாற்றங்கள் சமனாகும்.
B) இரு துணிக்கைகளினதும் இறுதி வேகங்கள் சமனாகும்.
C) இது துணிக்கைகளிலும் தாக்கிய சராசரி விசைகள் சமனாகும்.
இவற்றுள் சரியானவை

1. A,B,C மூன்றும் 2. A மட்டும் 3. A யும் Bயும்
4. A யும் Cயும் 5. C மட்டும்

10) கரடான கிடைத்தரையில் இருக்கும் 1 kg திணிவுள்ள பொருளில் 10 N என்னும் கிடைவிசை பிரயோகிக்கப்படும்போது அதன் ஆர்முடுகல் 5 $ms^{-2}$ ஆகும். பொருளுக்கும் தரைக்கும் இடையேயான இயக்கவியல் உராய்வுக்குணம்
1. 0.2 2. 0.3 3. 0.5 4. 0.6 5. பூச்சியம்

11) வளியில் வைக்கப்பட்டுள்ள குவிவு வில்லை ஒன்றில் படும் ஒளிக்கதிர் X ஆனது முறிவடைந்து செல்வதைக் காட்டும் பொருத்தமான வரிப்படம்.




1. 1 2. 2 3. 3
4. 4 5. 5

12) சாதாரண மனிதக்கண் ஒன்றில் கண் வில்லைக்கும், விழித்திரைக்கும் இடைப்பட்ட தூரம் 2.5 Cm ஆகும். குறைபாடில்லாத ஒரு கண்ணுக்கும் கண்வில்லையின் குவியநீளமானது
1. 2.5 Cm ஆக எப்போதும் இருக்கும்.
2. 2.27 Cm இலிருந்து 2.5 Cm வரை மாறுவதாக இருக்கும்.
3. 2.5 Cm இலிருந்து 2.67 Cm வரை மாறுவதாக இருக்கும்.
4. 2.5 Cm இலும்கூடிய எல்லாப் பெறுமானங்களுக்கும் மாறும்.
5. 2.5 Cm இலும் குறைந்த எல்லாப் பெறுமானங்களுக்கும் மாறும்.

13) பின்வருவனவற்றுள் வெப்பநிலையுடன் குறையும் கணியத்தை இனங்காண்க
1. வாயுவொன்றின் அமுக்கம் 2. வாயுவில் ஒலியின் வேகம்.
3. கதிர்த்தொழிற்பாட்டு சமதானி ஒன்றின் தொழிற்பாடு
4. உலோகம் ஒன்றின் மின்தடை 5. சிலிக்கன் துண்டின் தடைதிறன்


14) பின்வரும் விடைகளில் எது திண்ம உராய்வு, பிசுக்குணகம் பற்றிய பொய்யான தகவல்களைக் கொண்டுள்ளது?

*திண்மங்களில் உராய்வு*
1. திண்ம மேற்பரப்பு வழியே தாக்கும்.
2. சார்புக் இயக்கத்தை எதிர்க்கும்.
3. மேற்பரப்பின் பரப்பளவில் தங்கியிராது.
4. வேகத்தின் பருமனில் தங்கியிராது.
5. ஓய்விலுள்ள பொருளொன்றில் தொழிற்படுகிறது.

*பிசுக்குணகம்*
திரவ மேற்பரப்புவழியே தாக்கும்.
சார்பு இயக்கத்தை எதிர்க்கும்.
மேற்பரப்பின் பரப்பளவில் தங்கியிருக்கும்.
வேகத்தின் பருமனில் தங்கியிருக்கும்.
ஓய்விலுள்ள பொருள் ஒன்றில் தொழிற்படாது.

15) ஒருசீர்க் காந்தப்புலத்திலே இயங்கும் மின்னேற்றம் ஒன்றில் தாக்கும் காந்தவிசை பற்றி கூறப்பட்டவற்றுள் தவறானது.
1. ஏற்றத்தின் வேகத்தில் தங்கியிருக்கும்.
2. காந்தப்புலத்தில் பாய அடர்த்தியில் தங்கியிருக்கும்.
3. இவ்விசையினால் செய்யப்படும் வேலை பூச்சியமாகும்.
4. எப்போதும் இயக்கத்திசைக்கு சமாந்தரமாக இருக்கும்.
5. ஏற்றத்தின் தன்மையில் தங்கியிருக்கும்.

16) காட்டப்பட்ட மின்சுற்றிலே கல்வனோமானி பூச்சியத்திரும்பலைக் காட்டுகின்றது. பின்வருவனவற்றுள் எந்தச் சந்தர்ப்பத்தில் சமநிலை குழம்பும்.




1. R5 மாற்றல்
2. R6 மாற்றல்
3. (G) மானியில் இணைக்கும் முடிவிடங்களை புறமாற்றல்.
4. கலத்தின் இணைக்கும் முடிவிடங்களைப் புறமாற்றல்.
5. R2 ஐ மாற்றல்.

17) காட்டப்பட்டுள்ள பரிசோதனையில் முடிவின் செம்மை பின்வரும் எந்தநடைமுறையின் மூலம் அதிகரிக்கச் செய்யப்படுவதில்லை.


*பரிசோதனை*
1. கலவைமுறையில் பனிக்கட்டியில் உருகலின் தன்மறைவெப்பம்.
2. அழுத்தமானியில் மின் இயக்கவிசையை அளத்தல்.
3. புவசேரிக் முறையில் நீரின் பிசுக்குமைக் குணகத்தைத் துணிதல்.

4. மீற்றர் பாலத்தில் தடையை அளத்தல்.
5. அறையில் பனிபடுநிலையை அளத்தல்.

*நடைமுறை*

சிறிய ஈரலிப்பற்ற பனிக்கட்டித் துண்டுகளை உபயோகித்தல்.
உறுதியான ஓட்டத்தை வழங்கும் கலத்துடன் அழுத்தமானியை இணைத்தல்.
மயிர்த்துளைக்குழாயை உபயோகித்தல்.
உறுதியான ஓட்டத்தை வழங்கும் கலத்தை உபயோகித்தல்.
துலக்கமான மேற்பரப்புடைய பாத்திரத்தை உபயோகித்தல்.


18) m திணிவுடைய Aஆரையுடைய சீரான திண்மக் கோளம் ஒன்றின் சடத்துவத் திருப்பம் அதன் அச்சுப்பற்றி 2/5 $ma^2$ ஆகும். ஆனால் புவிக்கோளத்தின் சடத்துவத் திருப்பம் நவீன கணிப்புகளின்படி 0.3803 $mr^2$ ஆகும். இங்கு m புவியின் திணிவு , r புவியின் ஆரை. இதிலிருந்து புவிக்கோளம் பற்றி பெறக்கூடிய முடிவு.
1. புவியானது சீரான அடர்த்தியை உடைய திண்மக்கோளம்.
2. புவியானது ஒரு பொன்னான கோளம்.
3. புவியானது அடர்ந்த அகனியையும் மென்மையான வெளியோட்டையும் கொண்டது.
4. புவியானது மென்மையான அகனியையும் அடர்ந்த வெளியோட்டையும் கொண்டது.
5. புவிக்கோளத்தினுள் இடை இடையே வெற்று வெளிகள் உள்ளன.




19) வெற்றுப் பாத்திரம் ஒன்று a பரப்பளவு m திணிவுமுடைய கடதாசி மட்டையினால் மூடப்பட்டுள்ளது. கடதாசி மட்டையை மட்டுமட்டாக மேலே கிளப்ப, கடதாசியின் மேற்பரப்பு வழியே வளி உதைபடவேண்டிய இழிவுவேகம் (வளியின் அடர்த்தி - p)

1. $\sqrt{\frac{mg}{pA}}$ 2. $\sqrt{\frac{2mg}{pA}}$ 3. $\sqrt{\frac{mg}{2pA}}$

4. $\sqrt{\frac{mg}{2pA}}$ 5. $\sqrt{\frac{2pA}{mg}}$




20) தரப்பட்டுள்ளPV வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள சக்கர வெப்பவியக்கச் செய்முறை பற்றிய தவறான கூற்று
1. a - b செய்முறையில் தொகுதி வேலையைச் செய்தது.
2. c - a செய்முறையின் தொகுதியின் மீது வேலை செய்யப்பட்டது.
3. b - c செய்முறையில் வெப்பம் வெளியே காணப்படும்.
4. முழுச் செய்முறையிலும் செய்யப்பட்ட வேலை பூச்சியம்.
5. முழுச் செய்முறையிலும் வெப்பசக்தி அகச்சக்தி மாற்றம் பூச்சியம் ஆகும்.




21) வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள சேர்த்திக்கோல்கள் ஒவ்வொன்றினதும் நீளங்கள் முறையே L1, L2 ஆகவும் நீளவிரிவுக் குணகங்கள் முறையே $\alpha_1$, $\alpha_2$ ஆகவும் உள்ளன. இச்சேர்த்திக்கோலின் மலிதா நீளவிரிவுக்குணகம்.


1. $\frac{\alpha_1 + \alpha_2}{2}$ 2. $\frac{L_1\alpha_1 + L_2\alpha_2}{2}$ 3. $\frac{L1\alpha1 + L2\alpha2}{L1 + L2}$

4. $\frac{L1\alpha2 + L2\alpha1}{L1 + L2}$ 5. $\frac{\alpha1 + \alpha2}{L1 + L2}$

22) முறையே m1, m2 மூலக்கூற்று திணிவுகளையுடைய இரு வாயுக்கள் கொள்கலன் ஒன்றில் ஒரே வெப்பநிலையில் உள்ளன. அவற்றின் சராசரி இடைவர்க்கமூலம் C1, C2 எனின் C1/C2 வைத் தருக.

1. $\frac{M2}{M1}$ 2. $\frac{M1}{M2}$ 3. $\sqrt{\frac{M2}{M1}}$ 4. $\sqrt{\frac{M1}{M2}}$

5. 1





23) ஒரு மெல்லிய உலோகத்தோடு PQ ஆனது கொள்ளளவம் Cயை உடைய சமாந்தரக் கொள்ளளவி ஒன்றின் தட்டங்களுக்குச் சமாந்தரமாக இருக்குமாறு செலுத்தப்பட்டுள்ளது.
தகடு L PQ வின் பரப்பளவு கொள்ளளவித் தட்டத்தின் மேற்பரப்பளவுக்குச் சமன். PQ மேல் தட்டுடன் ஒரு மெல்லிய கம்பி இணைக்கப்பட்டால் தொகுதியின் புதிய கொள்ளளவம்.


1. C/4 2. C/2 3. C 4. 3C/2 5. 2C


24. M திணிவுடைய ஒருபொருள் கிடையான, ஒப்பமான பாதையில் u வேகத்துடன் இயங்கி 2M திணிவுடைய இன்னுமொரு பொருளுடன் மோதி இணைகிறது. இதன் காரணமாக ஏற்பட்ட இயக்கசக்தி.

1. 1/3 $Mu^2$ 2. $\frac{1Mu^2}{6}$ 3. $\frac{1Mu^2}{9}$ 4. $\frac{2Mu^2}{9}$ 5. $\frac{1Mu^2}{2}$





25) PQ, RS என்பன புறக்கணிக்கத்தக்க அகத்தடையுடைய மின்கலத்துடன் தொடுக்கப்பட்ட சீரான இருசம பரிமாணங்களை உடைய தடைக் கம்பிகளாகும். O PQ இன் நடுப்புள்ளி. Vமையப் பூச்சிய வோல்ற் மானியாகும்.
வழுக்கி A ஆனது Rஇலிருந்து Sக்கு அசைக்கப்படும்போது Vமானியின் வாசிப்பின் மாறலைக் காட்டும் பொருத்தமான வரைபு.




26) வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள மின் சுற்றில் கலங்கள் புறக்கணிக்கத்தக்க அகத்தடை உடையன.
ய சார்பாக bயின் மின்னழுத்தம்.
1. -2V 2. +2V 3. +4V
4. - 4V 5. பூச்சியம்.




27) வரிப்படத்தில் காட்டப்பட்ட மின்சுற்றில் கலத்தின் அகத்தடை புறக்கணிக்கத்தக்கது. Aயும் Bயும் சரியான துலக்கத்தில் ஒளிருவதற்கு R1, R2 என்பவற்றில் பெறுமானங்கள்
1. 3Ω, 2Ω 2. 2 Ω, 3Ω 3. 3 Ω, 3Ω
4. 2Ω , 2Ω 5. 1Ω, 6Ω

28) 1000N தடைவிசையை உடைய கிடையான பாதையில் ஒரு வாகனம் 36 $Kmh^{-1}$ என்ற மாறாக்கதியுடன் செல்கிறது. வாகனம் செலவிடும் வலு KW இல்


1. 36 Kw 2. 10 Kw 3. 100 Kw 4. 3.6 Kw 5. 0.36 Kw

29) விசைமாறிலி K ஐ உடைய சுருள் வில் ஒன்றினை x தூரம் நெருக்கி m திணிவுடைய ஒரு கல் விடப்படுகிறது. கல் அடையக்கூடிய அதி உயர்வேகம்.

1. $x\sqrt{\frac{m}{K}}$ 2. $\frac{xK}{m}$ 3. $x\sqrt{\frac{K}{m}}$ 4. $\frac{x2K}{m}$ 5. $x\sqrt{\frac{2K}{m}}$


30) R ஆரையுடைய சவர்க்காரப்படலம் ஒன்றை ஊதுவதற்குச் செய்யவேண்டிய வேலை (சவர்க்காரக் கரைசலின் பரப்பிழுவை)

1. $4\pi Rr^2$ 2. $8\pi r\lambda$ 3. $2\pi r\lambda$ 4. $\pi R^2 r$ 5. $2\pi Rr$




31) விற்தராசு ஒன்று கிடை மேசையில் கப்பிகளின் மேலாகச் செல்லும் நீட்டமுடியாத இழைகளுக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.
இழைகள் ஒவ்வொன்றும் 10 N சுமைகள் தாங்குகின்றன. விற்தராசின் விளைவு.

1. பூச்சியம் 2. 10N 3. 5 N 4. 20N 5. 15 N




32) வில்லையின் முதலச்சில் வைக்கப்பட்டுள்ள பொருள் O ஆனது சீரான வேகத்துடன் அசைகிறது. எதிர்ப்பக்கத்தில் முதலச்சின் வழியாக நோக்குபவனுக்கு அமைப்பானது.
1. பொருளின் வேகத்திலும் கூடிய ஒரு சீரான வேகத்துடன் அசையும்.
2. பொருளின் வேகத்திலும் குறைந்த ஒருசீரான வேகத்துடன் அசையும்.
3. விம்பத்தின் வேகம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு செல்கிறது.
4. விம்பத்தின் வேகம் தொடர்ந்து குறைந்துகொண்டு செல்கிறது.
5. முதலில் குறைந்து பின் அதிகரிக்கும்.

(தொடரும்.........)